

ஏதேன் வனம்

22-1-2024



















Pax Ravichandra

pax.ravichandra@gmail.com

இல	ஏதேன் மலர் வனம்
31	காதல் கவி பாட
32	காதல் காயங்கள்
33	காதல் மழைமேகம்
34	காதல் நஞ்சு
35	காதல் நெஞ்சு
36	காதல் ஓவியம்
37	காதல் ஓய்வதில்லை
38	காதல் பக்தன்
39	காதல் பாற்கடல்
40	காதல் தேன் துளிகள்
41	காதல் திருடன்
42	காதல் வசந்தம்
43	காதல் வைரஸ்
44	காதல் யாசகம்
45	காதலன்
46	காதலர் தினம்
47	காதலே போ போ
48	காதல்-காதல்-காதல்
49	காதல் கீர்த்தனம்
50	காதல் பாசுரம்

அன்பே சிவம்

மொழி கடந்த காதல் மொழியில் விழிகள் பேசும்,
புது இசையாய் தேவராகத்தை "எட்டாம்" சுரத்தில்
காதல் இதயங்கள் இசைக்கும்.

கண்பார்த்து நெஞ்செழுதும் கவிதை,
மனம் கடந்து-மனம் கனிய
காதலாய் இனிக்கும்.

விழிகள் தழுவி, விழிகள் சிவக்க
விண் தாண்டும் இதயங்கள், காமம் கடந்து,
காதலாய் மலர்ந்து "***கைலையில்***"
"***சிவசக்தியாய்***" ***சேர்ந்தாடும்***

நானழிந்து நாமாகிப்
அன்றில் பறவைகளாய் மாறிட
கூடி வாழ்தல் கொண்டாட்டமாகும்

உயிர் மெய் ஒன்றாய்க் கரைய, உணர்ச்சி
புது வெள்ளமாய்ப் பொங்கி வழிய
"அர்த்தநாரிஸ்வரனாய்" அவதாரம்,
அன்பின் ஆனந்தப் பேரின்பநிலைக்கு
'***சிவலிங்கம்***"காதல் சின்னமாகும்.

காலம் மறைந்திட,
"நான் எனும் நிலையும்" மறைந்திட,
இருப்பில் நாமிருக்கும் இன்பநிலை
"தரிசனமாகிட"எங்கும் ஆனந்தம்
இதுவே"***சத் சித் ஆனந்தம்***"

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-04-2023

அலை எழுதும் கவிதை

கரையெங்கும் அலை எழுதும் கவிதை,
கருவான் எங்கும், நிலவெழுதும் கவிதை,
பூ வனமெங்கும் புள்ளினம் பாடும் கவிதை,
காளை மனமெங்கும் காதல் எழுதிடும் கவிதை

என்னவளோ, இனியவளோ
கண்பார்த்து நெஞ்செழுதிய புதுக் கவிதை
என் என்பில் என்பாகி, ஊனில் ஊனாகி
உயிரில் கலந்த காதல் கீதை

தொட்டுத் தழுவிக் காமத்தீயணைத்திட
தேகம் எங்கும் தகிக்கும் மோக நெருப்பு,
தேன் முத்தம் பருகித் தாகம் தணித்திட
நெஞ்சிலோ ஓயாத காதல் விடாய்ப்பு

கட்டித்தழுவி கஜீராஹோ சிற்பங்களாய் மாறி
காதல் புரிந்திட காமனின் அழைப்பு,
ஒட்டி உறவாடி ஒருவரில் ஒருவர் கரைந்து
எல்லாம் மறைந்திட சிவசக்தியின் புதுப்பிறப்பு.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-04-2023

அழகு

தேகம் பூண்ட அழகைக் காண விழிகள் போதுமடி-
காதல் இதயம் பூண்ட அழகைக் காண
காதல் இதயம் வேண்டுமடி.

எத்தனை நேசமடி-உன் மீது நான் வைத்திருந்தேன்
நெஞ்சம் பைத்தியம்போல் அலைய
நினைவோ சோகச் சுனாமியில் அழிய
காதல் பைங்கிளியே பித்தனானேன்

காதல் இத்துனை கொடிதா?-
கன்னியர் நெஞ்சம் கருங்கல்லா? வைரமா?
ஒன்றும் புரியவில்லை

நெஞ்சில் பூத்திருந்த காதல் பூவனமும்
காதல் மழையின்றிக் நெருஞ்சிக் காடானது,
நேசமழை பொழிந்த காதல் மேகமோ-
சோகப்புயலில் கலைந்துபோயிட-இதயம்
நூலறுந்த காற்றாடியானது

ஊற்றெடுக்கும் கண்ணீரும் உயிரைக் கொல்ல,
பாட்டெடுத்த காதல் நெஞ்சும் சாக்கடலாகிட
கண்ணம்மா- நீயில்லா என் உலகோ செத்தகோளானதே
நெஞ்சம் காதல் மழையின்றி வாடுதே

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-04-2023

அன்பே

விண்ணில் உன் பெயரை எழுதிவைத்தேன்
காற்று கலைத்ததடி-மண்ணில்
உன் பெயரை எழுதிவைத்தேன்-கடலலைகள்
அழித்ததடி-என்றும் நிலைக்க-என் நெஞ்சில்
உன் பெயரை எழுதிவைத்தேன்- ஏனடி
என் அன்பே என்னைத் தவிக்கவிட்டாய்?

கானமாய் உன் பெயரை மீட்டி வைத்தேன்
கோகிலங்கள் பாடி மகிழ்ந்தன
கவிதையாய் உன் பெயரை எழுதிவைத்தேன
கவிஞர்கள் வாழ்த்திப்போற்றினர்

மதுமலர்களால் உன் பெயரை எழுதி வைத்தேன்
பூஞ்சிட்டுக்கள் கொண்டாடி மகிழ்ந்தன
என் ஊனிலும், என்பிலும் உன் பெயரை எழுதிவைத்தேன்
ஏனடி என் இதயம் துடிதுடிக்க, என்னைத் தவிக்கவிட்டாய்

உதிரத்தால் உன் பெயரை எழுதி வைத்தேன்
ஐயோ, இரத்தம் என்றாய்-இதயத்தில்
உன் உருவை பச்சை குத்திவைத்தேன்
என் நெஞ்சே நஞ்சாகிட
யாரிவள் காதலியா என்றாய்?

இதழ்களில் இதழ்பதித்து இடையணைத்து
இவள்தான் என் காதல் தேவதை என்றேன்
நாணி நின்றாள்-நான்தான் என்றும்
உன் காதல் என்றாள்

மையெழுதிய மலர்விழிகள் பூக்க
மெய்யிலோ உயிர் எழுதிய காதல் நாணிச்சிவக்க
என் உயிர்மெய்யானவள் என்னை கட்டியணைத்தே
காதல் தஞ்சம் என்றாள்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-04-2023

அதிசய நாட்டியம்

பூங்கொடிபோல் அசைந்தாடும் கொடியிடை
நீர்க்குடம் சுமந்துவர-கலைந்தாடும்
பூங்குழல் கார்மேகமாய் மிதந்துவர-பைங்கிளியாள்
கயல்விழிகள் நெஞ்சைக் கொத்தி காதல் கோலமிட-
பூங்குயிலாய் பண்ணிசைத்த என் நெஞ்சம்

கன்னச் சிவப்பின் வண்ணக்கோலம் காதல் தீ மூட்டிட
என்தன் வானில் காதல் நிலா உலா வந்திட
காற்கொலுசும், குண்டலங்களும் இசைமீட்டிட
வண்ண வளையல்களால் சொன்ன காதல் கவிதை
என் நெஞ்சில் கன்னி தூவிய காதல் விதை

இடை அசைய, குழல் ஆட நடையோ புது நாட்டியம்
கைவளையும், காற்கொலுசம் கன்னிக்கோ கட்டியம்
மாதவிக் கொடியோ கம்பனின் புதுக்காவியம்
குமுதச் செவ்வாயில்-அமுதச் சுவை பருகிட
காதலான மனமோ-வானில் பறந்த அதிசயம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-04-2023

ஏன் பிரிந்தாய் ?

உன்னுருவே-என் விழிகாணும் அழகோவியம்,
உன் மொழியே இன்னிசையாய்
என் செவி கேட்கும்-பிரணவ மந்திரம்.

நிலவழகென்றேன், பேரழகே- உன்னைக் காணும்வரை
மலர் மணமென்றேன்-உன் பூமேனி வாசம் நுகரும் வரை-
தேன் இனிதென்றேன்-உன்னிதழ் சுவைக்கும்வரை-பூந்தளிர்
மென்மையென்றேன் உன் பொன்மேனி தழுவும்வரை.

வளர் பிறையே-வசந்தமென்பது உன் வருகையால் மலர்வதோ?
வண்ணங்கள் என்பது, வானவில்லும், மலர்களும் நாணிட
உன் ஆணிப்பொன் மேனியில் நீ காட்டும் நாணக் கோலங்களோ?

நூலிடையும், கயல்விழிகளும் என்னை மயக்க
கார்குழலி மதிமுகத்தால்-கருவான் நிலவும் அதிசயிக்க,
உன் புன்னகையால்-பொன்நகைகளும் வெட்கி அழகிழக்க,
சொக்கி நின்றேன் சுந்தரியே உன் பேரழகில்

உன் செவ்வாயிதழ் முத்தத்தால் முக்கனியும் சுவையிழக்க,
இட்டவடியில் மேகலையும், எடுத்தவடியில் நூபுரமும் குதூகலிக்க,
அன்னமும் நாணுதடி உன் அழகுநடை கண்டு
கோகிலங்களும் கூடிப் பாடுதடி உன் தேன்மொழி இசையென்று

என் இதயமெங்கும் உன் பெயரை எழுதி வைத்தேன்
இதயமும் பாடி மகிழ்ந்ததடி காதல், காதல் என்று
இன்றோ சாதல் வந்ததென்றே என் இதயம் துடித்திட
ஒவ்வொரு மூச்சிலும் என் சுவாசம்- தென்றலுக்குத்
தீ மூட்டிட, ஏனடி என்னைப் பிரிந்தாய்? மறந்தாய்?

காதல் தேவதையாய் இதயத்தில் குடிவைத்தவனுக்கு
கழுமரத்தைப் பரிசாக்கினாய்? அமுதாய்ப் பருகி
மகிழ்ந்தவனுக்கு -ஏனடி கொல்லும் நஞ்சாகினாய்?

அமுதும், ஆலகாலமும் தரும் கன்னியர் நெஞ்சும் பாற்கடலோ?
தேவனாய் மகிழந்து பின் தேவதாஸாய்ப் புலம்பிட
இந்தக் காதல் அதிசய அமுதோ? கொல்லும் ஆலகால நஞ்சோ?
நெஞ்சே சொல்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-04-2023

ஏதேன் தோட்டம்

எந்தப்பூங்குயில் என்னைக் கவிஞனாக்கிட
கானமழைபொழிந்ததோ-எந்தத் தேவதை
என்னை “ முதல் மனிதனாய்க்” கண்டு
காதல் மழைபொழிந்ததோ-அவளிற்காய்
நானிசைக்கும் கானம் இது

புகை படிந்த சித்திரமாய், மழைமேகம் மூடிய
பௌர்ணமியாய் வாடி நின்றவளை ஓவியமாக்கினேன்
மிதிலையின் மைதிலியாய் நாணிணாள்-காவியமாக்கினேன்
காளிதாஸன் சகுந்தலையாய் மலர்ந்தாள்.
கண்ணீர்ப் பூக்களை களைந்தவனிடம்
காதலைப் பகிர்ந்திட இதயத்தை யாசித்தாள்

வண்ணக்கனவுகள் என் கண்களில் மலர்ந்திட
வானவில்லின் வண்ணங்களை என் இதயம் அணிந்திட
“*ஏதேன் தோட்டத்தில்*”
ஆதாம் ஏவாளாய் புதிய காதல் ஜோடி

மொழியிலோ- முத்தமிழின் இனிமை-நடையிலோ
அன்னத்தின் மென்மை-புன்னகையில்
பூமழையின் சிலிர்ப்பு-என்னையிழந்தே
-தேன்மழையாள் காதல் மழையில் நான் நனைந்தேன்

பொன்மனச் செம்மலான கன்னி
அன்பெனும் தவம் பூண்ட கலைவாணி
சந்தனச்சிலையென மேனி
என்னை காதல் நோயால் வாட்டிய மோகினி

கார்குழல் சூடிய மலர்களில் காதல் மணக்க,
மையெழுதிய கயல்களில் மயக்கும் மோகனம் ஜொலிக்க,
செவ்வாய் இதழ்களில்-இனிக்கும் தேனருவி சுரக்க,
நாணிச் சிவந்து காதல் மொழிய- என்னை இழந்தேன்

இட்ட அடியிலும், எடுத்த அடியிலும்
பாதக் கொலுசு காதல் இசைக்க,
பூவையோ பாவையானது என்னைப்
பொன்விலங்கிட்டு நெஞ்சில் சூடியது.

நாளும் சூடிட, மஞ்சளும் குங்குமமும்,-மனையாளாய்த்
தன்னைச் சூடிட மன்னவன் என் காதல் நெஞ்சும்,
நாளும் கொஞ்சி மகிழ, மழலைகள் பத்தும்
நீ தரவேண்டும் என்றவள் சூடிக் கொடுத்த ஆண்டாளா?
வாடிக் கிடந்த என் நெஞ்சில் காதல் பூக்களை
தூவியவள் பாடி மயக்கும் மீராவா?

என் இதயவீணையின் அமுதகானமே, உன்னை இசைக்கும் போது
கலைஞனாகிறேன், என் நினைவு நூலகத்தின் காதல்காவியமே,
உனை பயிலும்போது கவிஞனாகின்றேன்,என் இதயக் கமலத்தின
இன்பத்தேனே உன்னைப் பருகும்போது போதையாகிறேன்-ஏனடி?

விண்மட்டும் பறந்திட இறக்கைகள் தந்தவளே
கண்ணயர- விழிக்கும் கனவுகளுக்கு
வண்ணங்கள் தந்தவளே-என் காதலே
என்னிதயம் என்றும் உனக்கே.

உன் பூவாசம் கலந்ததினால்
என் சுவாசத்திலும்- காதல் வாசம்
உன் புன்னகையும் என்னைத் தொட்டதினால்
என் நெஞ்சிலும் ஓயாத பூபாளம்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-04-2023

ஏழையின் காதல்

கள்ளூறும் பூவனமோ? கண்மயங்கும் மோகனமோ?
காதல் சொல்லும் குயிலினமோ? நெஞ்சம்
கொஞ்சிமகிழும் பைங்கிளியினமோ?
கம்பன்கவி பாடிய அழகின் இலக்கணமோ?
என் கண்பார்த்த நெஞ்செழுதும் என்தன் காதல் காவியம்.

காமன் கண்நோக்க- நெஞ்சில் காதல் பூப்பூக்க
காதல் வெள்ளத்தில் இதயங்கள் ஆனந்தக் கூத்தாட
கானமழை பொழியும் கவிக்குயிலே-காதலால்
என்னைத் தன் சோடிக்குயிலாக்கினாள்,
கருவான் நிலவாய் என் நெஞ்சில் காதல் உலாவந்தே
என் இரவை ஒளிமயமாக்கினாள்.

கடலலைபோல் நெஞ்சில் ஓயாத காதல் அலைவீச
மண் கலந்த வான் மழைபோல் மது மலராள்
தேன் உறவும் நெஞ்சில் கலக்க
காதற் கிளிகளாய் வாழ்வு-கானக்குயில்களாய்ப் பாட்டு

காதல் மலர் சூடிடப் பூவாய் மலர்ந்தேன்
மதுமலராய்ச் சூடிட மனதைக் கொடுத்தேன்
அல்லி மலர்ந்திட-அந்தியில் சந்திரனாய் வந்தேன்-
அழகோ என்னை மறந்திட-ஐயகோ
காதல் ஏழையானேன், கண்ணீர்க் கடலுமானேன்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-04-2023

ஈரமான ரோஜாவே

பூவையா? இல்லை திருப்பாவையா?
பூவிழிகளால் நெஞ்சில் புதுக்கோலம் போடுகிறாள்
கோகிலமா? இல்லை பைங்கிளியா? இன்னிசையால்,
தேன்மொழியாள் காதலை இசைக்கின்றாள்?

சீதையா இல்லை சகுந்தலையா?
குவளை விழிகளால் நெஞ்சைத் திருடுகிறாள்
கனிமொழியா இல்லை தேன்மொழியா?
மணிமொழியால் என்னை மயக்குகின்றாள்?

வேல்விழிகளால் நெஞ்சை உழுது
காதலை விதைத்தவள்-கனிமொழியால்
என் மொழியையும் கவிதையாய் மாற்றியவள்
புன்னகையால் என்னையும்
பொன்னகையாய் சூடி மகிழ்ந்தாள்.

தித்திக்கும் இதழ்கள் மோகவீணையில் தேவராகம் இசைக்க
எத்திக்கும் இனிக்கும் செங்கரும்பை- முக்திக்கு
பக்தியோடு காதல் சூத்திரமாய் மனம் படிக்க
உமையொருபாகனாய் உருமாற்றம்,
வாசுகி-வள்ளுவனாய் மாறிக்
காமத்துப்பாலை சுவைக்கும் கொண்டாட்டம்.

ஈரமணலில் நான் எழுதிய காதல் கவிதையை
ஆழிப்பேரலை அழித்திட-வானில் பறந்த
என் காதல் அஞ்சுகத்தை பருந்து பறித்திட
ஒற்றைக் குயிலாய்க் கரைகின்றேன்
புயலில் சிக்கிய பூவனமாய்க் கலைகின்றேன்
என்காதலே, என்காதலே- ஏன் என்னைப் பிரிந்தாய்?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-04-2023

ஈரமில்லா ரோஜாக்கள்

ஓ இரக்கமில்லாக் அழகு மங்கையரே-உங்கள்
காலடியில் கசங்கியவை மலர்களல்ல மனங்கள்
உங்கள் வேல்விழியாள் விழுந்தவை
மான்களல்ல-அப்பாவி ஆண் மனங்கள்

வார்த்தைகளால் கொல்வதற்கு-வஞ்சிகளே
உங்கள் பூ நெஞ்சம் முள்ளாவதும் ஏனோ?
நாங்கள் தேவதாஸாய் அலைவதற்கு, பார்வதிகளே
உங்கள் காதலும் நஞ்சாவதும் ஏனோ?

என் நினைவே இல்லாதவளை எண்ணி
நெஞ்சம் உருகினேன்-என் கனவே வராதவளிடம்
ஏழைபோல் காதலை இரந்தேன்

தீயினிது, தீண்டிடும் கொடிய தேளினிது,
கொடிது, கொடிது -தேனூறும் செவ்விதழாள்
சுடுமொழி தீண்டி விளையும்-தீராக்
கொடுவலி கொடிது கொடிது

கன்னியர் இதயத்தை கட்டிக் கரும்பென்றேன்
இனிக்கும் தேனென்றேன், சுவைத்திடத் தெரிந்தது
கட்டிக் கரும்புமல்ல, கற்கண்டுமல்ல, இரும்பென்று.
கொட்டியபின் தெரிந்தது முள்ளல்ல, தேளென்று.

அன்றோ அழகுமங்கை அன்பிற்காய் அலைந்து
நொருங்கிய இதயம் -இறைமகன் அன்பினால்
இன்றோ தன்னையறிந்து இன்புற்றது

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-04-2023

ஏக்கம்

காதலாகி என்னுள்ளம் கனியாதோ?
கவிதையாய் என் மொழியும் மாறாதோ?
உன் புன்னகை பூச்சூடி என் நெஞ்சம் மலராதோ?
நாணக்கொடி காட்டி நீயும் காதல் சொல்லாயோ?
கள்வடியும் மலர்கூந்தல் காதலியே
காதல் தேன் வடியும் பூவாய் என்னைச் சூடாயோ?

கோபம்

என் நிழலும் உன்னைத் தீண்டாது
என் விழியும் உன்னைத் நோக்காது
என் மணமும் உன் சுவாசம் கலவாது-மறந்தும்
என் மனமும் உன்னை நினைக்காது

மாதே இசைபாடும் குயிலல்ல நீ என் மனத்தோப்பில் உலாவிட
மணம் கமழும் புதுமலரல்ல நீ- என் மனம் சூடி மகிழ்ந்திட,
அசைந்தாடும் இளந்தென்றலல்ல நீ- என் சுவாசம் கலந்திட
அழகே, மோகத்தீயல்ல காதல்-அன்பின் வேள்வியடி-காதல்
இதயங்களின் அதிசய ராகமடி-காதல்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-04-2023

என் தோழி

குவளை விழிகளில் சோகத்தேன் வடிய
கொஞ்சும் மொழிகளில் நெஞ்சின் கலக்கம் தெரிய
அரியநட்பும் வாடியதேயென்று-
அழுது நின்றாள், என் அன்புத் தோழி

நிலவாய் மலர்ந்து -மலராய் பூத்த “நட்பூ”
முழுமதியாய் மாறுமுன் தேய்பிறைாய் ஆனதோ?
பனி மழையில் நீராடி, புது ஒளியில் கண்மலரக் காத்திருந்த
“நட்பூவும்” கொடுவெயிலில் வாடிப்போனதோ?

உன் கண்ணீரால்-என் கல்மனமும் கரைய
உன் விம்மல் கேட்டு என் பூமனமும் நொருங்க
என் மனமும் மலர்ந்ததடி தோழி
வாடிய பயிருக்கு வான் மழையும் கிடைத்ததடி.

நீர் சிந்திய மலர்விழிகளிலோ நிம் “ மதி” உலாவர,
வான் மதி கண்ட அல்லியாய் வாடிய மனமும் பூத்திட,
பொன் முகத்தில் நட்பை காட்டி-பூவிதழில் புன்னகை சூடி
பூமகளும் மலர்ந்தே நடந்தாள்-‘நட்பை’ கற்பாய்ச்” சூடி.

கையணிய வளையல் அல்ல- நட்பு
காலணிய சிலம்புமல்ல
காதணிய குண்டலமல்ல-நட்பு
நூலிடை சூட “மேகலையுமல்ல”
சிரசணிய சூளாமணியுமல்ல

இதயம் சூடி மகிழ, இரு மனங்களில் மலர்ந்த
ஐம்பெரும் காப்பியம் கடந்த அரிய “பூ”
நட்பூ அறிவாய் -என் அன்புத் தோழி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-04-2023

என்றும் நான் உன்னோடுதான்

காதல் கவி பாடும் கவிஞன் நெஞ்சிலோ
ஆறாத காயங்கள் -காரிருளாய்க் கலையாத சோகங்கள்.
ஒற்றை குயிலாய் உள்ளம் புலம்பிட-ஓட்டைப் படகாய்
மனம் சோகடலில் அமிழ்ந்திடும் அவலம்

மேகத்துண்டுகளாய் உடைந்த உள்ளம்-காதல் தேடி
சோக வெளியில் அலைந்து களைத்திட-நரகத்தீயை-
நெஞ்சில் மூட்டிய காதல்-விழிவழியே
கண்ணீர்க் கங்கையாய்ப் பொங்கிப் பிரவாகிக்கும்

ஏழ் கடல் உப்பைச் சுவைத்திடக் கொடுக்கும்
காதல் சோகமும் சாக்கடல்தானோ?
அணையாச் சோகத்தீயை-நெஞ்சினில் மூட்டிடும்
காதலும் -எரி நரகுதானோ?

அமுதாய் இனித்த காதலும்
ஆலகாலமாய் மாறியதும் ஏனோ?
அமுதை பொழிந்த நிலவும்
எரிமலைத் தீயைக் கக்குவதும் ஏனோ?

என்னை நீ அறிந்திருந்தால், என் கவிதை
உனக்குப் புரிந்திருக்கும்-
என் காதல் உனக்குத் தெரிந்திருக்கும்
தெரிந்தும், புரியாததாய் ஏனிந்த ஊமை நாடகம்?

நெஞ்சமோ மெழுகாய் உருக-நினைவோ
காதல் அஞ்சுகத்திற்காய் அழுது புலம்ப,
கயல் விழிகளிலோ கண்ணீர்ப்பூக்கள்,
கனிமொழிகளிலோ சோகக் காதல் பாக்கள்.

என்றும் நான் உன்னோடுதான் என்பதை
பூக்களும், காதல் பாக்களும் சொல்ல
என் நெஞ்சிலே சாய்ந்த பூங்குழலி-காதல் ஊஞ்சலில்
என்னை ஆடவிட்டு-கவிதைக் கடலில்
என்னை நீந்தவிட்ட கயல்விழி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-04-2023

எத்தனை அழகு

வேல்கள் எதற்கு-உன் விழிகள் இருக்கையில்
பூக்கள் எதற்கு- வாசப்பூவாய் நீ மணக்கையில்
மதுவும் தேனும் எதற்கு-மங்கையின்
குமுதவாயில் அமுது இருக்கையில்

தென்றல் எதற்கு- உன் பார்வை அணைக்கையில்
வெண்ணிலா எதற்கு-உன் வண்ணமுகம் தெரிகையில்
முத்துக்கள் எதற்கு-உன் பற்கள் ஒளிர்கையில்
பொன்நகை எதற்கு-உன் புன்னகை மலர்கையில்
நூலிடையில் மணிமேகலையாய் என்னைச் சூடியவளே
இராட்சியம் எதற்கடி-என் காதல் ராணி நீ இருக்கையில்

புல்லாய் மலர்ந்தேன்-பனித்துளியாய் இணைந்தாய்
பூவாய் விரிந்தேன்-தேன் துளியாய் நிறைத்தாய்
மழையாய் விழுந்தேன்-மண்ணாய் நெகிழ்ந்தாய்
வானாய் விரிந்தேன்-வெண்ணிலவாய் ஒளிர்ந்தாய்

புன்னகை பூத்தேன்-பொன் நகையெனச் சூடினாய்
பூந்தென்றலாய் தவழ்ந்தேன்-பொக்கிஷமாய் அணைத்தாய்
பூமகளே-என் அன்புக்காதலியே-உன்னைப் பிரிந்தபின்
என் மெய்யும்-பொய்யானது-என் உயிரோ
ஓட்டை விழுந்த ஓசோன் வானாய் ஆனது

தேனாய் இனித்தாய்- பருகிச் சுவைத்தேன்
தெள்ளு தமிழாய் ஒலித்தாய்- பாடி மகிழ்ந்தேன்
வெண்ணிலவாய் ஒளிர்ந்தாய்-பார்த்து ரசித்தேன்
தென்றலாய் வந்தாய்-தழுவி மகிழ்ந்தேன்

வாசமலராய் மலர்ந்தாய்-சூடி மகிழ்ந்தேன்
பாசமலரே உன் காதல்-என் ஊனில் கலந்த உயிரோ
என் உதிரம் கரைந்த சிவப்போ-சொல்?

கல்லாய் கிடந்த என்னைகட கண்ணண் ஆக்கினாள்;
முள்ளாய் கிடந்த என்னை-வண்ணப் பூமாலையாக்கினாள்
சொல்லாய் கிடந்த என்னை கண்ணண் பாசுரமாக்கினாய்-
ஆண்டாளே உன் அன்புக்கு நன்றி.
மீராவே உன் பக்திக்கு நன்றி.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-04-2023

இதயம்

எண்ணம்தான் செய்மதிபோல் எப்போதும்
காதல் நிலவே உனைச் சுற்றி வரும்-என்னிதயம்தான்
ஈர்ப்பு விசையாய் உன்னிதயத்தை ஈர்த்திருக்கும்-குருதி
வண்ணம்தான் உயிர்க்கலமெங்கும் உன்னைக் கோலமிடும்
உன் பூவாசம்தான் உயிர்ச்சுவாசமாய் என்னுள் உலாவி மகிழும்

கண்மணியே உயிர்க் காதலியே
விண்மீன் வானத்து வெண்ணிலவும்
வெண்பனி வாழும் துருவங்களும் உள்ளவரை
திண்ணமாய் என்னிதயம் ஒருபோதும்
உன்னை மறவாது.

மையெழுதிய விழிகள் காதல் சொல்லிட
மெய்யெழுதிய நாணம் என்னை மயக்கிட
இதழ்விரிய கள்ளூறும் ஈரச்செவ்விதழ்கள்
காதல் போதையை நெஞ்சில் ஏற்றிட மயங்கினேன்

விற்புருவங்களும், வேல்விழிகளும்
காமன் கணைகளாய் எனை வருத்திட
காதலில் வீழ்ந்தேனடி கண்ணம்மா-உன் கண்பட்டு
கவிபாடும் பூங்குயில் ஆனேனடி என்தன் செல்லம்மா

பலநாட்களாகக் காணத்தவித்துக் கண்டதுவும்
பல நாழிகைகளாகப் பேசத்தவித்து பேசியதுவும்
காதல் பொன்விலங்கிட்டு பூ மனதில் என்னை
சிறைகொண்டதுவும் கள்ளோ, காவியமோ?
சொல்லடி என் செல்லப்பைங்கிளி

சோடிக்கிளிகளாய் கதைபேசி
அன்றில் பறவைகளாய் கூடித்திரிந்து
ஆதாம், ஏவாளாய் ஆடிமகிழ்ந்ததுவும் கதையோ?
கற்பனையோ? கள்ளூறும் பூவனமே நீ சொல்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-04-2023

இதய வீணை

சங்கினுள் ஒலிக்கும் சந்தம்போல்
என் நெஞ்சுக்குள் ஒலிப்பதும்-அன்பே உன் பெயரே
கங்கையில் கலந்த சீதளம்போல் என்னில்
கலந்ததும்-ஆருயிரே உன் காதலே அறிவாயா?

கடலைத்தேடும் நதியைப்போல்
நிதமும் உன்னைத் தேடி ஓடும் என் மனம்
துணையைத் தேடும் குயிலாய்-உனக்காய்
புலம்பித் தவிக்கும் என் உள்ளம்

என்னைச் சுற்றும் தேன் நிலவே-ஏன் மறைந்தாய்?
என்னைத் தாலாட்டும் பூந்தென்றலே-ஏன் பிரிந்தாய்?
கண்ணுக்குள் கங்கையும்-இளநெஞ்சுக்குள்-எரிமலையும்
விழிக்கப், பூ மனதை அழிக்கும் கொடும்புயல்,
இடிதாங்கி இல்லாத இதயத்தை நொருக்கிடும் பேரிடி
எதற்கடி என்தன் காதல் கண்மணி?

உன் பிரிவால் என் நெஞ்சிலோ -பாரச்சிலுவை
நினைவிலோ, சீதையை இழந்த
ஸ்ரீராமனின் கண்ணீர்ச் சுவை

தந்தி அறுந்த வீணையில் காதல் ராகம் சுரமிழந்து தள்ளாட,
வான்பறந்த காற்றாடி நூல் அறுந்து புழுதியில் அல்லாட,
ஆனந்தம் கூத்தாடிய காதல் மனதில்
சோகத்தின் ருத்திர தாண்டவம் -ஏனடி

உன் பிரிவால் என் காதற்கோலமும் அலங்கோலமாகிட
உன் நினைவால் என் நெஞ்சும் காட்டுத் தீயில்
பச்சைமரமாய்க் கருகிட, ஏனடி-என் நெஞ்சுக்குள்
காதல் தீபத்தை ஏற்றினாய்?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-04-2023

இனியவளே

பொன் வண்டு நான் சுவைக்க
பூவனம் நடுவே தேன்மலராய் நின்றவள்
தமிழ்ச் சொல்லின் நடுவே-என்
"மெய்க்" காதல் பிழைக்க "உயிராகி வந்தவள்

எனை வருத்தும் காமனை வெல்லக் காதல் தந்தவள்
என்னைத் தித்திக்கவைத்த முப்பாலின் நடுவே
காமத்துப்பாலாய் இனிப்பவள்

முக்கனி நடுவே-மாங்கனியாய்ச் சுவைப்பவள்
என் மாமன் கன்னியாய் எனை மயக்கியவள்
இனியவளே என்று இதயம் பாடிடும்
என் காதலி வாழ்கவே

புள்ளிக்குயில்

வட்ட நிலவு வானில் எழுந்தபோதும்
வசந்தம் வந்து போன போதும்-
தொட்டு தழுவியவன் வரவில்லையே என ஏங்கி
ஏதேன் தோட்டத்துப் புள்ளிக்குயில்
ஏகாந்தத்தில் முகாரி இசைக்கும்

பட்டுப்போன உன் வாழ்வில்-பசுமை பூத்திட
சோகத்தில் மெட்டுப்போடும்-கோகிலமே
விட்டுப்போன உன் துணைவன் வரவில்லையோ?
என் மனம் ஏங்கி-என் காதலியாள்
மெல்லிடையை கவிதை சொல்லித் தழுவும்.
கானக்குயிலுக்காய் கடவுளை வேண்டும்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-04-2023

இதயப் புற்றுநோய்- காதல்

இதயமெங்கும் சித்தன்னவாசல் மோகனச் சித்திரங்களாய்
காதல் வரைந்த- என் காதலியின் ஓவியங்கள்
கன்னமெங்கும்- அவள் பிரிவு ஓட்டிய
சோகச் சுவரொட்டிகளாய் தாடி மீசை

புண்ணான காதல் நெஞ்சோடு காதல் குப்பை நான்
மண்ணில் கிடக்க-நன்றி மறவா என் நாய்
என் கண்ணீரை நக்கித் துடைக்க-நாய்களின்
அன்பு-கன்னியர் காதலிலும் மேலானதோ?

மதுவில் மூழ்கி-அவளை மறக்கத்துடித்தேன்
முடியவில்லை, கடலில் பாய்ந்து காதலை
கொல்லத் துணிந்தேன் முடியவில்லை
மதுவும் நஞ்சும் காதலை மறக்கும் மருந்தாக
காதலை மறந்து தூங்கப்போகின்றேன்.

மங்கையர் காதலும்-மதுவிலும் போதையே
மறக்கவும் முடியாமல், துறக்கவும் முடியாமல்
மனதை அரித்து உயிரை வருத்திக் கொல்லும் காதல் கூட
இதயத்தை பற்றிப் படரும் புற்றுநோயோ?

இனியவளே! உன் இதயவீணையை மீட்டிப்பார்
என் காதல் பூபாளம் உன்னை மயங்கவைக்கும்
என் புல்லாங்குழலை இசைத்துப்பார்
என் வேணுகானம் நீயென்று உனக்கு தெரியும்

நினைக்கத்தெரிந்த மனதிற்கு -இனியவளே
உன்னை மறக்கத் தெரியவில்லை, துடிக்கத்
தெரிந்த என் இதயத்திற்கு நடிக்கத் தெரியவில்லை.
நலம் வாழ உன்னை வாழ்த்திப்போகின்றேன்-காதல்
பைங்கிளியே-என்னை நினையாதே நெஞ்சம் வருந்தாதே.

காதலும் பொய்யே-ஏமாற்றும்
கன்னியர் நெஞ்சும் கொடிய நஞ்சே

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-04-2023

இதயமே இதயமே

- -

உனக்குள் தவிப்பதோ என்னிதயம்
எனக்குள் துடிப்பதோ உன்னிதயம்-காதலே சொல்
என் இதயத்திற்கென்ன? ஏனிழந்தாய் நிம்மதி?

வண்ணக் கனவுகளையும், வாசமலர்களையும்
அள்ளித் தந்த காதலே-இன்று
கண்ணீரில் உன் கயல்கள் நீந்திட
கார் குழல் பூக்களும் வாடிடக் கலக்கம் ஏனோ?

இதயமே- உன்னுள் உருகி கரைவது-என் மனமே
உயிர் மூச்சாய் என்னுள் உலாவருவதும்
உன் சுவாசமே-அறிவாயா?

உன் பெயர் சொல்லி துடிக்கும்-என்னிதயம்
உன் காதல் இல்லையேல் ஓய்ந்து மடியுமடி
என்னுள் ஓடும் வண்ணக் குருதியும்-என்னுயிரே
நீயில்லையேல் உறைந்து அழியுமடி

துள்ளித்திரிந்த புள்ளிமானின்-
கால்களிலோ ஊனம்
பாடிக்களித்த புள்ளிக்குயிலின்
பண்ணிலோ முகாரி –ஏனோ?

என் பொன்வானத்து வெண்மதியே தேயாதே மறையாதே
என் பூ வனத்து வாசமலரே வாடாதே உதிராதே
விண் பூத்த வெள்ளிமலர்களும்
மண் பூக்கும் வாசமலர்களும் வாழும்வரை-
பொன்மணியே என் மனம் பூத்த உன் காதலோ
வாடாது, உதிராது-கவலையேன்
கண்ணில்-விழிநீர் மலர்களும் ஏன்?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-04-2023

காதலி

வேல்விழியால் என்னை வீழ்த்தி
தேன்மொழியால் உயிர்மூச்சை நிறுத்தி
பூங்கரங்களால் அள்ளியணைத்து
செவ்விதழ் முத்தங்களால்
எனை உயிர்ப்பித்தவள்-தேவதையா?

கனவிலும், காதலால் என்னை வருத்தும் காமினி
என் நெஞ்சை ஆட்கொண்ட மனமோகினி
காமன் மகளா? மனமே நீ சொல்?

இதழ்களால், இதழ்கள் கடைய
வானமுதம் தரும் பாற்கடலோ இவள்?
படிக்குந்தோறும் இனிக்கும்
நன்நூலோ, காமத்துப்பாலே இவள்?

நூலிடையில் மேகலையாய் என்னை
சூடிய மணிமேகலையோ இவள்?
என் இதயத்தை களவாடிச் சூடிய
மைதிலியோ இவள்.

காதலி , என்னைக் காதலி -மந்திரமாய் மனம் ஓதிட
என்னைக் காதலில் வீழ்த்திய பைங்கிளி-தேவதாஸாய்
என்னைக் காதல் பித்தனாக்கிய பார்வதி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-04-2023

கலாப மயில்

அழகில் திருமகளாய்-ஆடலில் அபிநய சுந்தரியாய்ப்
பூவை ஜொலிக்க, கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் பூவனமாய் மணக்க
கைவளையும், காற்கொலுசும் கானமழை இசைக்க -
நெஞ்சில் மலர்ந்த காதல், நினைவில் தேனாய் இனிக்க,
என்னைத் தேடி நின்றாள் -வழிமேல் விழி வைத்து
வரும் வழி பார்த்து நின்றாள் -தேவதை

நடையில் மாதவி நடனமாட, இடையில் மணிமேகலை
இசைத் தமிழ் பாட, வருவது மேனகையோ,
ஊர்வசியோ என மனம் தடுமாற, வாசமல்லிகை மணம் வீச
வசந்தம் வந்ததென்று நெஞ்சம் குதூகலிக்க
என் நெஞ்சில் பூத்த காதல் மலர் வந்தாள்

முப்பாலையும், தித்திப்பால் மிஞ்சிட்ட பெண்பால்,
ஏற்பாளோ, மறுப்பாளோ என் காதல் வெண்பாவை,
கவிஞன் மனம் தடுமாற-கொஞ்சும் கிளியோ-
வஞ்சிக்கொடியோ-ஏழைக்கு
காதல் தஞ்சம் ஈந்தாள் தன் நெஞ்சில்

தித்திக்கும் வானமுதே தேவனாய் மாறி உன்னைப் பருகவோ?
எத்திக்கும் மணக்கும் வாசச் சந்தனமே
பக்தனாய் மாறி உன்னை மார்பில் பூசிமகிழவோ?
முப்பாலிலும் தித்திக்கும் பெண்பாலே-வஞ்ளுவனாய் மாறி
வாசுகியாய் உன்னை ஆட்கொள்ளவோ? மனம் கவி பாட
இப்பாரினில் எனை ஆட்கொண்ட ஆண்டாளே-
அரங்கநாதனாய் என்னை மாற்றி சூடிக் கொண்டாள்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-04-2023

கல்லறைத் தோட்டம்

கல்லறைத்தோட்டமெங்கும் காதலில் தோல்வியுற்ற
காளையரின் சமாதிகள்போலும்-வஞ்சிகளால்
வஞ்சிக்கப்பட்ட வாலிபர்கள் தூங்குகிறார்கள்





கன்னியரே-இங்கு கண்ணீர்ப் பூக்கள் வேண்டாம்
வண்ண மலர்கள் வாடி விடும், எரியும் தீபங்கள் வேண்டாம்
விட்டில்கள் விழுந்து மடிந்துவிடும்

நடுகல்லாய் எங்கள் சமாதிக்கு நாட்டிடக்-கன்னியரே-
கல்லான உங்கள் இதயத்தை தந்து-அதில்
"**கன்னியர் காதல் பொல்லாதது**"
எனப் பொறித்துவிடுங்கள்

மடிந்தால் மண்ணுக்கு உரமாகி, மலர்ச்செடிகளில் பூவாவேன்
பூங்குழலி உன் கார்கூந்தல் சூட,
விண்ணுக்குள் காற்றாகி வீசு தென்றலாவேன்
உன் பூமேனி தழுவி மகிழ்ந்திட-

"மெய்யாய்" நான் உன்னை காதலித்தபோது.-அன்பே
"பொய்யாய்" ஏனடி என்னை நீ காதலித்தாய்?
பாடி மகிழ்ந்த என் காதல் கனவாய் கலைந்து
பொய்யாய் பழங்கதையாய் ஆனதடி -மனம் வாடுதடி

கண்மணியே, என் காதல் பைங்கிளியே
கல்லான உன் இதயத்தை தந்துவிட்டு-காதலால்
கனிந்த என் இதயத்தை எடுத்துக்கொள்
உன்னால் -இன்னொரு காளை-இனியும்
இங்கு வரவேண்டாம்

ஒற்றை குயில்களே கரைந்து பாடுங்கள்
கன்னியர் கல்நெஞ்சங்கள் உருகிக் கரையட்டும்
கள்ளூறும் வண்ண மலர்களே பூமழை பொழியங்கள்
காதல் எத்துணை இனிதெனக் கன்னியர் அறியட்டும்

காதலர்கள் தோற்கலாம்
காதல் தோற்பதில்லை-ஆதலால்
மானுடரே காதல் செய்வீர்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-04-2023

கள்ளோ காவியமோ

கள்ளோ, காவியமோ-இல்லை தேவகானமோ?
கோகிலப் பண்ணோ- கொவ்வைச்
செவ்வாய் செப்பிய மொழி இசைத்தேனோ?

கள்ளுமல்ல, தேனுமல்ல, கவிதைத்
தமிழுமல்ல, கம்பன் காவியமுமல்ல,
கானக்குயிலின் பண்ணுமல்ல,
கொட்டும் அரவத்தின் நஞ்சே என அஞ்சிட
காதல் நெஞ்சை சுட்டிட்ட கொடுந் தீயே-
அவள் செவ்வாய் செப்பிய சொல்

கன்னியிவள் இதயமோ- கொடும் பாலை
கனிமொழிகளிலோ தீச்சுவாலை
ஏழையிவன் வண்ணவிழிகளிலோ கண்ணீர் மாலை
காதல் இதயத்திலோ சுனாமிப்பேரலை.

என் இதயம்

பொன்மண் சொன்னதா?-பூத்துச் சிரிக்கும்
செம்பூ சொன்னதா?-வானவில் சொன்னதா?
இல்லை வந்து போகும் வசந்தம் சொன்னதா?
விண்ணமர்ந்த வெண்ணிலா சொன்னதா?
வீசும் தென்றல் சொன்னதா?
யார் சொன்னது? என்னவளே-உன்னை
எண்ணித் துடிக்கும் என் இதயத்தில்
என்றும் நீதான் வாழ்கிறாய் என்று.

செவ்வாய் மொழிந்தது செந்தேனோ?
என் செவிவழி பாய்ந்தது-இசைத்தேனோ?
கண்வழி காணாத உறவே-விண்வழி
கேட்கும் உன் குரல் என் காதல் கீதம்
உன் பெயரே என் உயிர் நாதம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-04-2023

கனவே மலராதே

~~~~~~

இதயம் முழுவதும் ஏழ்கடலின் அலைகள்
அவளை எண்ணி எழுவதும், சோர்ந்து விழுவதுமாய்
சோகமனதின் காதல் நிலைகள்.

காதலே!, உன் காதலை அறிய தென்றலைத் தூதுவிட்டேன்,
பூங்கொடியே நீ அசையவில்லை, மழையைத் தூதுவிட்டேன்
செம்மண்ணே நீ நெகிழவில்லை, குயிலைத் தூது விட்டேன
பூங்குயிலே நீ கரையவில்லை

ஏழ்கடலைத் தூது விட்டேன்
உன் மனதின் ஆழம் புரியவில்லை,
வான் நிலவைத் தூது விட்டேன்
என் வாழ்வோ அமாவாசையாய் ஆனதடி

நெஞ்சமெல்லாம் புண்ணாகி, நினைவெல்லாம்
நெருஞ்சி முள்ளாகி, உயிரைத் தூது விட்டே
உறங்குகிறேன் உன் இதயம் இளகுமென்று
காதல் சொல்லுமென்று.
சொல்வாயா என் காதல் பைங்கிளி

காதலே கலைக்காதே – என் தூக்கத்தை,
கனவே மலராதே- ஏழை நெஞ்சுக்குள்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-04-2023
~~~~~~

கண்ணம்மா என் காதலி

உன் பட்டாம் பூச்சி இமைகளின் துடிப்போ-இனியவளே
என் இதயத்தை வீழ்த்திடும் காதல் சூறாவளி
உன் வேல்விழிப் பார்வையோ
பூமனதை காயப்படுத்திடும் காமன் கணைகளடி

உன் பொன்மேனி வாசமோ
என் சுவாசத்தை மயக்கிடும் போதையடி
உன் முந்தானையின் ஸ்பரிசமோ
என்னை மெய்சிலிர்க்கவைக்கும் தென்றலடி

உன் முத்துப்புன்னகையோ
இதயம் சூடிடும் பொன்நகையடி-கண்ணம்மா
உன் காதலோ-எரிநரகிலும்
சொர்க்கத்தை சிருஷ்டிக்கும் அதிசய உறவடி

உன் நெஞ்சிலாடும் பூவாவேன்
புது வசந்தம் நீயானாள்
உன்னைத் தாலாட்டும் தென்றலாவேன்
என் சுவாசம் நீயானாள்

உன் பொன்வானாய் நானாவேன்
என் காதல் தேன் நிலவாய் நீ வந்தால்
உன் பூந்தரையாய் நானாவேன்
உன் பொற்பாதம் நடைபயின்றாள்-உயிரே
நீ வாழும் கோயில் ஆவேன்
என் காதல் தேவதை நீயானால்

விண்ணில், வெள்ளிமலர்கள் பூக்கும்-இரவு வந்தால்,
மண்ணில், வண்ணமலர்கள் பூக்கும்-உதயம் வந்தால்,
என் நெஞ்சில் காதல் மலர் பூக்கும்-பூவே
என் நெஞ்சில் நீ வந்தால், கண்ணம்மா
என் காதல் நிலவே வருவாயா?- சொல்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-04-2023

கண்ணே கண்ணுறங்கு

என் நெஞ்சில் காதல் பூ பூத்த வசந்தகாலம்
காதல் மழை பொழியத்- தினமும்
காமன் பண்டிகையின் விழாக்கோலம்.

காதல் வந்தது முதல்-நெஞ்சம் கனாக்காண,
நாளும் காதலர் தினம்,
கல்யாண நாள் முதல்-மஞ்சம் மகிழ்ந்தாட
நெஞ்சங்கள் ஒன்றாய் கூத்தாடும் திருவிழாக்கோலம்

காதல் கிளிகளாய்க் கொஞ்சி, கலாப
மயில்களாய் ஆடிட-ஊடல் கொண்ட
ஜோடிக்குயில்களின் பாடல்கள்,

கண்வழி நுழைந்து நெஞ்சினில் முளைத்த
காதல் வித்தே, என் இரவில் பூக்கும் நிலவும் நீயடி
காலையில் என்னைத் தொட்டு எழுப்பும் கதிரும் நீயடி

என் நெஞ்சில் நீ வந்த நாளே-
என் பிறந்த நாள், "காதலர்களாய்"
நாம் பிறந்த பொன்னாள்

மும்தாஜே -என்அன்பே, நீ கண்ணயர்ந்த நாள் முதல் -
என் விழிகளுக்கோ கார்காலம்
என் நெஞ்சிற்கோ-என்றும் விடியலில்லா இராக்காலம்

கண்மணியே கண்ணுறங்கு-உன் அருகே நானிருந்து,
இமைக்காமல் என் ஈரவிழிகள் காயாமல்,
உன் உறக்கம் கலையாமல் பாத்திருப்பேன்.

ஐவேளை தொழும்-என் நெஞ்சும் அனலிடை மெழுகாய் உருகிட
நான் எழுப்பும் மும்தாஜ் மஹாலோ-நீ கண்ணுறங்கும்
கலைக் கோயிலாகிட, காலமுள்ளவரை-என் கண்மணி
நம் காதல் வாழுமடி, காதல் அமரகாவியமடி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-04-2023

கண்ணீர் மலர்கள்

என் விழிக்குளத்தில் ஏன் பூத்தாய் கண்ணீர்ப் பூவே ?
என் காதலியாள் குவளைக் கண்கள் வாடி,
மைவிழிகள் ஊடலால் கரையக்கண்டோ?
வாடி நீயும் பூத்தாய்-பூவே நீ சொல்

கலங்கிச் சிவந்து கண்ணீர்ப் பூச்சொரியும்-பூவிழிகளை
இதழ்களால் மெல்லத் துடைத்து, மது மலர்களால்
கார்கூந்தல் அலங்கரித்து, குலமகளைக் கொஞ்சித்தழுவிட
கட்டியணைத்த கரங்களுள்-என்னைக் குத்தி, கூத்தாடி நின்ற
மோகமுள், இதழ்களால் சொல்லி மகிழ்ந்ததோ காதல் பண்.

பார்த்தாலே போதை ஏறிட காமன் கள்ளோ இவள்
ஒரு பார்வையே, ஆயிரம் காமன் கணைகளாய்
நெஞ்சை வருத்திட மோகமுள்ளோ இவள்?
என் மாமன் மகளே இவள்!

காதலையும் விழி-மொழியும், கண்ணீரையும்
விழி-பொழியும், அதிசயமொழி பேசும் அழகிய விழியே
என்றும் மெய் பேசும்,உன் வாய்மைக்கு புகழாரமாய்
இறைவன் உன்னை வாய்மேல் வைத்தே
இமைசூடி சிறப்பித்தான் போலும்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-04-2023

கண்பார்த்து நெஞ்செழுதிய காதல்

என் ஐம்புலன்களையும் புண்படுத்தும் ஆனந்த அவஸ்தையே!
காமன் கணையா நீ ? என் ஆறறிவிலும் ஆனந்த
அமுதை சுரக்கும்-தேன் மலரே காதல் தேவதையா நீ ?

உன் ஒரு புன்னகையால் என் நெஞ்சுக்குள் பூமழை
உன் ஒரு கண்ஜாடையால்-மனசிலோ
காதலின் ஆனந்த நர்த்தனம்

சிரிப்பொலியில், இராகமாலிகை பிறக்க
வளையோசை, காதல் அழைப்பு மணியாய் ஒலிக்க
காற்கொலுசோ கட்டியம் சொல்ல,
அழகின் நாட்டியமாய் வரும்- காதல் தேவதையே
விழிகளால் நீ எழுதிய மடல்களிளெல்லாம்
கவிதைப் பூக்களோடு, காதலின் பூவாசம்

நோயுற்றபோதும், மனச்சோர்வுற்றபோதும்
உன் தாய்மடியில் சேயாக்கி தாலாட்டித் தேற்றினாய்
இறக்கை விரித்து பாடிப்பறந்திட சிங்காரக் குயிலாக்கினாய்-
தாயுமாகி நின்ற தேவதையே என் அன்புக் காதலி நீதானடி

இதழ்கள் கொண்டு, இதழ் "கள்" உண்டு
உடல்கள் கொண்டு உடல் "கள்" உண்டு
காதல் போதையால், உயிர் மெய் கலந்து மனமழிந்து
அர்தநாரிஸ்வரனாய் உருமாறிட வரம் தந்தவளே
உயிரும், மெய்யும் ஒன்றாகி
பாலும் தேனுமாய் கலந்து இனித்திட
உமையொருபாகனாய் உருமாற்றி-உன்னில்
ஒரு பாதி ஈந்தவளே-என் உயிரக் காதல் நீயடி.

மணமும், சுவையும் கொண்ட மாங்கனியா?
மதுவும், நிறமும் கொண்ட மதுமலரா இவள்?
உயிரும், மெய்யும், உள்ளமும் ஒன்றாய் மயங்கிட
காதல் சொன்ன கன்னித்தேவதை!-என் காதலியே

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-04-2023

காதல் தேசம்

கயல்விழி வலையில் விரும்பி விழுந்திடும்
காதல் வயப்பட்ட ‘‘காளை மீன்கள்’’,
மொழி கடந்த காதலின் இன்ப அவஸ்தையில்
துடித்திடும் காமன் கணை பட்ட இதயங்கள்

பழும் இலக்கியச் சுவை புது இன்பம் தர
வாயின் சிவப்பை விழிவாங்க
மலர்கண் வெளுப்பை வாய் வாங்க
இதயங்கள் இடம் மாறித்துடிக்கும்

எழுவதும் விழுவதுமாய்-இதயம்
காதல் கடலாய் உருமாறித்தவிக்கும்
கடிதங்கள் கவிதையாகும்-காதல்
கனவுகள் பகலிலும் பரவசமூட்டும்

குளியலறையில் இசை பிறக்கும்-கூடிக்களித்து
கதைபேசும் காதல் கிளிகளாய்-இணைந்து
கவிபாடும் கானக்குயில்களாய் வாழ்வு மாறும்.

அலைபேசி காதல் தூதனாகும்-குறுந்தகவல்கள்
வள்ளுவனும் வாசுகியும் -எழுதும்
புதிய காமத்துப்பாலாகும்

காலமும் இடமும் கடந்த நிலையில், காதல் வயப்பட்ட
இதயம் சொர்க்கமாகும், தொலைபேசி அழைப்பு மணி
ஆனந்த சங்கீதமாகும், கடை விழிப்பார்வை
பழங்கள்ளிலும் போதையாகும்

ஒருமொழியும் கவிதையாகும்
‘‘பறக்கும் முத்தங்களால்’’ இறக்கைகள்
முளைக்க இதயங்கள் சோடிக்
கிளிகளாய் எழுந்து பறக்கும்.

வெண்ணிலவும் விரகதாபத்தை கூட்டும்
காணும் வண்ணமலர்களும்
காதல் நெருப்பை நெஞ்சில் மூட்டும்
அறிவு இதயத்திற்கு அடிபணிய-எல்லாம்
அன்பு மயமாகி இன்பமயமாகும்

ஒரு விழிப்பார்வையில்-நெஞ்சில்
பூமழை பொழியும் ஒரு வெட்கப் புன்னகையில்
சொர்க்க வாசல் மெல்லத்திறக்கும்.

விழிகள் பார்த்து விழி “கள்” ஊறும்
இதழ்”கள்” சுவைக்க இதழ்கள் உருகும்
மொழிகள் கேட்டு செவிகள் மயங்கும்
ஒரு தொடுகையும்-மெய்யில் கோடி சுகந்தரும்
நேசம் கலந்து-சுவாசம் வாசமாகும்
வாழ்வு காதல் தேசமாகும்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-04-2023

காதல் கதம்பம்

என் இரவின் நிலவாய் என் இன்பக்கனவாய்
என் நெஞ்சில் நிறைந்த காதல் உறவே
உன்னால் என் இரவும் ஒளிவீச-
இதயமோ காதல் பூவனமாய் மணம் வீச
காதல் மழையில் தோய்ந்து
காதல் சுரத்தில் வாடும் நெஞ்சம்
உன் நெஞ்சில் கோருதடி காதல் தஞ்சம்

காமன் கணைபொழிய கன்னி மனம் காமத் தீக்குளிக்க
இது காதல் வாட்டும் வாடைக் காலம், பசலை நோயுற்று
கரு விழிகள் நீர்பொழிய இது கார்காலம்.
மலர்ந்த பொன்முகம் மஞ்சளின்றி வாட
விரிந்த கார்கூந்தல் மலர் இன்றிக்காய
இது மலர் உதிர் காலம்

ஒன்றான உள்ளங்கள் இரண்டாய்ப் பிரிந்து
அங்குயிரும் இங்குடலுமான இராக்காலம்,
அங்கொருவர் இங்கொருவரான கொடுங்காலம்.

நீயம் நானுமாகி நின்றதுவும்
நிலவும் வானுமாகி சுற்றி மகிழ்ந்ததுவும்
மலரும் மணமுமாகி,கடலும் நதியுமாகி
கலந்து மகிழ்ந்ததுவும் காதலின் பொற்காலம்.

என் வாழ்வும் நீயடி-என் வசந்தமும் நீயடி
பார்க்க பார்க்க-நெஞ்சில் பரவசம் ஊறும்,
அழகை விழிகள் பருகப் பருக நெஞ்சில்
காதல் போதை ஏறும்,
படிக்கப் படிக்க காமத்துப்பாலாய்
இனிக்கும் இவள் தேவதையா?

செவ்விதழ்ச் சுவை தேனோ? அமுதோ?
கனிமொழிச் சுவை முக்கனியோ? சக்கரையோ?
மனம் தடுமாறித் தவித்திட
முத்தமிழ் சுவைத்துச் சிவந்த செவ்வாயும்
காதல் அபிநயம் காட்டி களிக்கும் கயல்களும்
எனை மயக்கிட-அழகில் திருமகளோ
அறிவில் கலைமகளோ என்னை ஆட்கொண்ட தேவதை

பார்க்க மயங்கும் பசுந்தேறலோ?-விழிகள்
பருகப் பருக போதை ஏற்றிடும் கள்ளோ?
காமத்துப்பாலோ இவள்?

வேல் விழிகளால் வாள் விழிகளை உராசி, என் நெஞ்சிலே
காதல் தீயை மூட்டினாள் காதல் காமத்தில் வெந்து
நான் வருந்திட, என்னை வாட்டும் காதல் பிணியுமாகி
என் நோய் தீர்க்கும் காதல் மருந்துமான-சஞ்சீவினி

வான் உலவும் தேன்நிலவோ?
தேன் பெற்ற திருமலரோ? கண்பெற்ற புண்ணியமோ?
நெஞ்சுற்ற தவத்திற்கு கிடைத்த காதல் வரமோ இவள்!

தையலாள், நெஞ்சிலே காமன் கணைகள் தைக்க
மையெழுதிய விழிகளும் மழை குளிக்க
காமன் தீயணைக்க கங்கைக்காய்-கன்னியும்
கன்யாகுமரியாய்த் தவமிருக்க
கட்டியணைத்தே முத்தமிட்டேன், காமத் தீ வளர்தே
காதல் யாகம் செய்தே களிப்புற்றோம்
காதல் தேவர்களாய் மாறிட வரம் பெற்றோம்

நெஞ்சத்து நெருப்பாற, விழிநீர் மழை ஆற
மடலேறு நிலை தவிர்த்து வாஞ்சித்த காதலும் திசைமாற,
வஞ்சிமகள் நெஞ்சில் வந்தாள் காதல் இன்பம் தந்தே.

சேய் உறங்கினும், கண் உறங்காது தாய் விழிகள்,
மண் உறங்கினும், கண் உறங்காது மண் புதைந்த
மணி விதைகள்,-எங்கிருந்தாலும் கண் உறங்காது-
கண்ணே, மலர்க்கூந்தல் காரிகையே
உன் காதலில் விழுந்த என் நெஞ்சம்

நீயின்றி வாடும் மனம், மழையின்றி வாடும் பயிராக,
நிலவின்றி சோரும் கருவானாக, கண் உறங்காது
நான் எழுதும் கவிதையெல்லாம்-காதலே
இன்றும் உறங்காத காதல் நெஞ்சிற்கு-அன்று
கவிதையாய் நீ சொன்ன காதல் மொழிகளே

எழுத்தால் சொல்ல இயலா சொல்லோவியம்
சித்திரமாய் வரையமுடியாத அழகோவியம்
சிலையாய் செதுக்கமுடியாத உயிரோவியம்
கண்பார்த்து நெஞ்செழுதிய காதல் காவியம்.

படைத்த பிரம்மனும் காதலாகித் தவித்திட,
பார்த்த மதனும் காமத்தால் துடித்திட,
முடித்த மணத்தால் மூப்புற்று தேவரும் வருந்திட,
முற்றும் துறந்த முனிகளையும் காமநோய் வாட்டியதே

காளையர் நெஞ்சம் கலங்கிட, நானிலத்து மலர்களும்
பூத்துக் குலுங்கிட, மலர் வனமாய், ஆனந்தத் தென்றலாய்
அழகெடுத்த நடையில் அன்னப்பேடு மயங்கிட,
மொழி ஒலித்த அழகில் பைங்கிளியும் வாய் குழறிட,
கோதையாய் வந்து என்னை சூடி மகிழ்ந்த
காதல் பாவை ஆண்டாளே? மீராவோ?
காதல் நெஞ்சே நீ சொல்!

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-04-2023

காதல் கவி பாட

காதல் கவி பாடக் ஸ்ரீராமன் காத்திருந்தான்,
ஜனகன் மகளே நீ பாடவில்லை-ஆடிக்களித்திட
ஆனந்த நடராஜன் பாத்திருந்தான்,
உமையாளே நீ ஆடவில்லை, ஏனடி என் காதலி-
உன் இதயத்தில் யாரடி என்றேன்?

மதுரையை எரித்த தீ-கண்ணகியின் திருமுகத்தில்-ஜொலிக்க,
துஷ்யந்தன் மறந்ததால் வந்த வலி சகுந்தலையின் பூ நெஞ்சை
வருத்த, விழிகள் நீர்ப்பூக்களை உதிர்க்க, விம்மலில்
பொன் மார்பும் விரிந்து தளர்ந்திட அழுது நின்றாள் என் பேரழகு.

உனக்குள் துடிப்பதோ என் இதயம், எனக்குள் அழுவதோ
உன் இதயம் -இருந்தும் ஸ்ரீராமனே, என்னை நீ
தீக்குளிக்கச் சொல்கின்றாய், தனியே என்னை
நீ வனவாசம் போ என்கிறாய்
கொடிது கொடிது ஆண் மனது என்றாள்-என் சீதை

வருந்தியே வஞ்சிக்கொடிக்கு-நெஞ்சைத் தேராக்கி
வாடிய மயிலக்கு மெய்யைப் போர்வையாக்கினேன்
வஞ்சியும் மகிழ நெஞ்சிலோ காதல் பொங்கிட-கொஞ்சியே
உன் பாடல் நான் என்றேன் காதல் பண் நான் என்றாள்

பரதம் என்றேன்-பாவம் நானென்றாள்-
தேன் என்றேன்-இன்சுவை நானென்றாள்
சிவனென்றேன்- உன் சக்தி நானென்றாள்.

நாணிச் சரணடைந்த நங்கைக்கு-உன் ஊனென்றேன்
உயிர்ச் சுவாசம் நானென்றாள், காதல் மழை நீ என்றேன்
வளரும் பயிர் நீ என்றாள், மண் என்றேன் கலக்கும்
மழை நான் என்றாள் -என் இன்பத்தேனை-
காதல் இராகம் மீட்டும் இதயவீணையை
என்னென்பேன் வார்த்தையில் சொல்லறியேன்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-04-2023

காதல் காயங்கள்

ஒரு கண்ணாடிபோல் நொருங்கிப்போனேனடி
நூலறுந்த பட்டமாய் நொந்து அலைந்தேனடி
விண்மீன்போல் உதிர்ந்து விழுந்தேனடி
ஒரு சுடரினைப்போல் அணைந்தேனடி-
சுந்தரி உன் காதலின்றி
-
ஓடும் மேகம்போல் உன்னைத் தேடியலைந்தேன்
கானமயிலே உன்னைக் கண்டபின்
கார் மேகம்போல் கரைகின்றேன்
-
தேன் மலரோ? இல்லை வான் நிலவோ?
புள்ளினம் கவிபாடும் பூம்பொழில்
கண் வியந்தது- காதல் கொண்டு - நெஞ்சு
வேல் விழியாள் புண்பட்டது.

விழியோ? வேற்படையோ? நெஞ்சைத் துளைத்து
நினைவிழக்கச் செய்தது.

காதலே, நீ வந்து போயிட-வாடகை வீடாய்
என்னிதயமா கிடைத்தது?

காதலே இவை கண்ணீர்த்துளிகள் அல்ல
உன்னை எண்ணி உருகி கரையும்
உடைந்த என் இதயத் துளிகளடி

காதல் என் கண்ணீர் வானத்தில்
வண்ணமிழந்த வானவில்
என் இருண்ட வானில்-உதிர்ந்த நட்சத்திரம்.

அன்பே-என் நெஞ்சுக்குள் இருப்பது
நீதான் என்று உனக்கு தெரிந்திருந்தால்-நாவினால்
என இதயத்தைச் சுட்டிருக்கமாட்டாய்

ஏனடி என் இதயம் உனக்காய் துடிக்கின்றது
உன்னை எண்ணி தவிக்கின்றது?

என் இதயக்கதவு உனக்காய் திறந்திருக்க
உன்னைத் தவிர
உள்ளே வந்தவர் ஏராளம்.

என் கிழிந்த இதயத்தை ஒரு புன்னகையால் தைத்தவளே
ஓட்டை விழுந்த- என் ஓசோன் இதயத்தை
சுவாசக்காற்றால் நிறைத்தவளே -உனக்காய்
எண்ணெய்யும் திரியுமின்றி உருகி எரிகின்றேன்-
இன்னுமா இளகவில்லை உன் இதயம்?

என் காதல் நதிக்குப் பாதையில்லை
கண்ணீர் கடல்தான் முடிவோ?

காதலியே உன் பாலை நெஞ்சிற்குள் பாயும்
என் கண்ணீர் நதிகள்-உன் கல்லான இதயத்திற்கு
அர்ச்சனையாகும் என் கண்ணீர்ப்பூக்கள்.
உன் காதல் சோலைக்குள்-ஒற்றைக்குயிலாய்
கரையும் என் இதயகீதங்கள்
இருந்தும் - ஏனோ உன் மனம்
இன்னும் இளகவில்லை

உன் கண்கள் -கயலானதால்
என் இதயம்-வலையானது

மலையில் தோன்றி சாக்கடலில் கலந்த
பயணம்-என் காதல்

அன்று ஒரு புன்னகையால் என் நெஞ்சில்
காதலை விதைத்தவள்-இன்று
அக்கினிப்பூக்களால் அர்ச்சிக்கின்றாள்.

உன் இமைகள் பட்டாம் பூச்சியானதால்
என் இதயம் பூவானது.

என் இதயத்தை பிழிந்தேன்-கண்ணீர் நதிகள்
என் நினைவுகளை தேய்த்தேன்
மணக்கும் சந்தனமாய்- உன் நினைவுகள்

ஆழம் காணாத கடலே உன்னில் கலந்திட
மழைத்துளியானேன், வாசம் மாறாப் பூவே-
உன் நேசம் கிடைத்திட, உன் இதயவாசலில் -
தேன்தும்பியாய் ஓயாத என் காதல் முற்றுகைகள்

என் பாலை இதயத்தில்-பொழிந்த முதல் காதல் மழை-
உன் புன்னகை, என் காதல் ரணத்தின் காயங்களிவை
காதலே, கடைக்கண்பாரடி

காதல் இசைக்காத இதயங்களில்லை
வாழ்வில் ஒரு பொழுதேனும் வந்த போகாத-
“தேவதாஸ்” நிலைகளுமில்லை

நீ போகுமிடமெல்லாம் ரோஜாவாய் மலர்ந்தேன்
சூடிக்கொள்ள உனக்கு மனமில்லை
வீணே வாடிப் போகிறேன்-நீ வாழுமிடமெல்லாம்
தென்றலாய் தவழ்ந்து வந்தேன்
உனக்கோ தழுவிமகிழ மனமில்லை
தவித்துப்போகின்றேன்

சோடிகுயில்களாய் பாட நினைத்தேன்
ஒற்றைக்குயிலாய் கரையவிட்டாய்,
காதல்கிளிகளாய் கதை பேசத் துடித்தேன்
கூண்டுக் கிளியாய் அழவைத்தாய்?

உன் காதலை எழுதி அழித்திட-என்னிதயத்தை
ஏனடி காகிதமாக்கினாய்?-ஒரு மாலைக்குள்
அழிந்துபோயிட என் இதயவாசலில்-ஏனடி
உன் காதலை மாக்கோலமாக்கினாய்?

உருகும் பனியாய் கரைகின்றேன
எரியும் மெழுகாய் உருகின்றேன்
உதிரிப் பூக்களாய் விழுகின்றேன்
அன்பே! உனை மட்டும் எண்ணி.

இடம்மாறி இதயங்கள் உறவாடும் புது நிலையில்
“நான்” “நீ”யாகிப் போனேன்-“நீ”
“நானாகிப்” போனாய்
இறக்கைகள் முளைத்திட எழுந்து பறந்தேன்
அன்பே! காதல் என்பது இத்துணை பரவசமா?

காதல் புயலே நீ சாய்த்திட
என் சின்ன இதயமா உனக்கு பூவனமானது
காதல் சுனாமியே நீ அழித்திட என் மனமோ உனக்கு
கடலோரச் சிற்றூரானது.

இதயக்கோயிலோ அழுகைச் சுவராய் சிதைவடைய
காதற் கடலோ சாக்கடலாய் உருவழிய
என் உள்ளமெங்கும் கண்ணீர் பூக்களின் கண்காட்சி
என் கவிதைகளிலோ சோகத்தின் ஆட்சி

இணையாத காதலுக்கு-அன்பே
உன் நினைவே போதுமடி

ஏனடி உன்னைப் பார்த்தேன்-பரவசமானேன்
கண்ணீராய் என் இதயம் கரைந்து ஓடிட
ஏனடி இந்த காதல் சோகம்?

கண்களால் ஏனடி என் நெஞ்சில்
காதலைச் செதுக்கினாய்?
கண்ணீரால்-என் காதல் கோயிலில்
காதல்தேவதையே
உன் காதல் வேண்டி நாளும் அபிஷேகம்

சக்தி, உன்னோடு இருக்கும்போது
சிவமாகின்றேன்
உனை பிரியும்போது சவமாகின்றேன்

காதலே என் நெஞ்சக்கடலில்-இன்றும்
உன் நினைவின் அலைகளடி

என் உயிரெழுத்தே நீ போனபின்
உயிரிழந்ததடி என் மெய்
ஊமையாய்ப்போனதடி என் உள்ளம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-04-2023

காதல் மழை மேகம்

கண்பார்த்து நெஞ்செழுதிய காதல் காவியமே
காதல் மழைபொழியும் காதல் மழை மேகமே
வானாய் விரிந்து, வண்ண நிலவாய் ஒளிர்ந்து,
தேனாய் இனித்து, தெள்ளு தமிழாய் ஒலித்து
இதயம் காதல் மணம் வீச,
பூவாய் மலர்ந்து, பூந்தென்றலாய்த் தழுவி
காதலனும், கவிஞனுமாய் எனை மாற்றிய
காதல் தேவதையே

உன்னால் என் உயிர்க்காற்றும் குதூகலிக்க
துடிக்கும் இதயமும் உன் பெயர் சொல்லிக் களிக்க
வாழ்விலோ புதுவசந்தம்

இன்றோ ஓயாத மாரி மழையை விழிகள் பொழிய
கான மழையாய் நெஞ்சில் முகாரி ஒலிக்க
என் பொன் வானமெங்கும் கார்மேகக் கூட்டம்
என் பூ வனத்தை வாட்டும் கொடும்புயலின் சீற்றம்

இதயத்திலோ சீதையை தேடித்தவிக்கும்
ஸ்ரீராமனின் சோகம்- ஈர விழிகளிலோ
தமயந்திக்காய்ப் புலம்பும் நளனின் பாவம்
துஷ்யந்தனை மறந்த சகுந்தலையாய்-ஸ்ரீராமனை
தவிர்க்கும் மைதிலியாய் என் காதலி

காதல் சுனையிலே கண்ணீர் மலர்கள்
சூடிக்கொடுத்தவள் மாலையிலோ வாடிய பூக்கள்
காமத்துப்பாலும் நாட்படத் திரிந்திட
காதற்பாற்கடலில் நஞ்சும் கலந்திட
காய்ந்த பாலையாய் நேசம் மறந்த நெஞ்சம்
துணையை பிரிந்த அன்றிலாய் தவிக்கும்
மஜ்னுவின் காதல் உள்ளம்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-20-04-2023

காதல் நஞ்சு

கண்பார்த்து நெஞ்செழுதிய காதல் காவியமே
விண் பார்க்கும் வண்ண மலர்களும்
மண் பார்க்கும் தேன் நிலவும்
உன் முகம் காட்டி என்னை வருத்திட
தென்றலும் தழுவி விரகதாபத்தைக் கூட்டிட
அனலில் விழுந்த புழுவாய்த் துடிக்கும் நெஞ்சு
கண்ணீர் மழைக் காட்டில் அலையும் காதல் மஞ்சு

கண்வழி நுழைந்து நெஞ்சினுள் உலவிய
காதல் நிலவே-ஏனடி என்னை மறந்தாய்?
கடல் கடந்து ஏன் பறந்தாய்?

முடமான இதயத்திலே நாளும் அமாவாசை
மலைத்தேனை விரும்பிய முடவன் மனதிலே
வாழ்வே மாயையான நிராசை

இறகொடிந்த பறவையாய் இதயம் வாடிட,
புழுதியில் எறிந்த வீணையாய் என் நிலை மாறிட
காதல் நெய்யின்றி அணையும் விளக்கு காரிருளில் மூழ்கிட
மெய்யானதே ஏழைக்கு காதலும் இழுக்கு என்ற மொழி

காதல் மழையின்றி வாடுதடி உன்தன் காதல் நெஞ்சு
வருத்துதடி நீ பருகத்தந்த உன்தன் "காதல் நஞ்சு"
அழகு மங்கையர் காதலும் நஞ்சோ?-ஆண்டவனைச்
சரணடைந்து அமைதியைத் தேடு நெஞ்சே

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-20-04-2023

காதல் நெஞ்சம்

காமன் கண் நோக்க-நெஞ்சில் காதல் பூ பூக்க
உன் வானில் காதல் நிலவாய் வந்தேன்
நீயோ உறக்கத்தில் இருந்தாய்

கனவாய் வந்தேன் நீயோ விழித்துக் கிடந்தாய்
பூவாய் மலர்ந்தேன்-நீயோ சூடமறந்தாய்
சோடிக்குயிலாய்ப் பாடி அழைத்தேன்-
நீயோ கூவிக் குரல் கொடுக்க மறந்தாய்

காதல் கிளியாய்ப் பேசிட அழைத்தேன்
ஊமைக்கிளியாய் மௌனம் காத்தாய்
கலாபமயிலாய் ஆடி அழைத்தேன்-
கன்னி மயிலே நீயோ ஆட மறுத்தாய்

கண்ணீர்ப் பூக்களாய் கரைந்தே உதிர்ந்தேன்
காதல் நெஞ்சைத் தந்தாய்-
கமல முகத்தில் புன்னகை-பருகத் தந்த
குமுத வாயிலோ அமுதச் சுவை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-20-04-2023

காதல் ஓவியம்

விழியிரண்டில் நயகராவின் நீர்க்கோலம்,
உயிர் மூச்சிலோ எட்னாவின் தீக்கோலம்,
மொழியிலே புகலிடம் தேடும் ஈழத்தமிழனின் அவலம்
உடைந்து நொருங்கிடும் இதயத்திலோ-தலிபான்
தகர்த்திடும்-பனியா புத்தர் சிலைகளின் அலங்கோலம்.

தேன்மொழியே-உன் வாய்மொழியும் பொய்யோ?-
அமராவாதியே நான் பாடிய பாடல்களும் வீணோ?
அழியாத கோலமாய் என் இதயத்தில் நீ இட்டது
கலையும் மாக்கோலங்களோ?
கலையாத ஓவியமென என் நெஞ்சினில் நீ வரைந்ததும்
கரையும் வண்ணப் பொடிகளின் கலவைதானோ?

இதயவீணையோ புழுதியில் கிடக்க
உதயம் காணாத இரவுகளாய் வாழ்க்கை
கண்ணீர் கங்கையிலோ என் படுக்கை

தவிக்கும் இதயத்திலோ- நாவரண்டு
நீரோடை தேடும் கலைமானின் ஏக்கம்
தவமிருக்கும் இதயத்திலோ- பல யுகங்களாய்
காதல் தேவதை காட்சி கொடுக்காத பேரவலம்

மானிடரே காதல் பொய்யல்ல-காதலர்கள் பொய்யே
காதல் போனபின் வாழ்தலினால் பயனென்ன-
வாழ்வும் பொய்யே.

இதயம் எழுதிடும் காதல் அமர காவியமே
இதயம் எழுதாத காதல் கேலிச் சித்திரமே
சீதனத்திற்கு விலைபோகும் சீமான்களே-காதல்
சந்தையல்ல –கடவுள் சந்நிதி

இல்லறமும் நல்லறமே- காதல் இதயங்கள் கூடிக்களிக்கும்
ஏதேன் தோட்டமே, ஆதலின் மானிடரே காதல் செய்வீர்
உண்மைக் காதல் அமரகாவியமே
வாழும் தாஜ்மஹால் அழியாத சாட்சியமே

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-20-04-2023

காதல் ஓய்வதில்லை

இனியவளே காதல் அலை வீசும் கடலா நீ?
நீச்சல் தெரிந்தும் மூழ்கிப்போனேன்.
கரை தெரிந்தும், அலையில் மிதந்தே
ஆனந்தக் கடலில் மூழ்குகின்றேன்

உன் சோடி அலையாய் -நாளும் விளையாட
மழைத்துளியாய் உன்னில் கலந்தேன்
உன் சோடிக்குயிலாய் நானும் பாட
உன் பாட்டுக்கு பாட்டெடுத்தேன்

பார்வைகள், தழுவிக் கொள்ளும்போது
பல மணிகளும் சில நொடிகளாகும்.
பார்க்காத சில நொடிகளும்-நெஞ்சம்
தீக்குளிக்கும் பல மணிகளாகும்

விழிகளின் காதல் அபிநயத்தில்
இதயங்களின் ஆனந்த நடனங்கள்
சோடிக்குயில்களின் தேவகானத்தில்
காதலின் அபூர்வ ராகங்கள்.

சுகங்கள் சுவைக்கும் விழிகளுக்குள்
சொர்க்க வாசல் திறக்கும்
மனங்கள் கலக்கும் மன்மதச் சங்கமத்தில்
காமன் பண்டிகை தொடங்கும்

யாரிவள்?
ஒரு பார்வையால் காமன் கணையை
நெஞ்சில் பாய்ச்சியவள்

என் கண்ணீர் விழிகளைத் துடைத்திட
பூக்கரங்கள் நீட்டியவள்
என் கவலைச் சுமைகளைத் தாங்கிட
தாய்மடி தந்தவள்

உன் இதயம்-என்னை ஈர்க்கும்
காதல் புவியீர்ப்பு விசையா?
காதலாகி கனிந்தே-கன்னி மயிலே
உன் மடியில் வீழ்கின்றேன்

என் இதயமும், காந்த ஊசிபோல்
உன்னை மட்டும் சுட்டி நிற்க-காதல் புலமா இல்லை
என் உயிரை ஈர்க்கும் காந்தபுலமா –நீ ?

வெண்ணிலவே- நீ உலாவரும் பாதை ஒளி பெற
வெள்ளிப்பூக்களாய் என்னை உதிர்த்து நின்றேன்
நாணி நின்றாய், துண்டு மேகங்களாய்
என்னை உடைத்துத் -காதல்
தூதுவிட்டேன் இதயம் தந்தாய்.

அமுதைப் பொழியும் நிலவே
அல்லிமலராய் விரிந்து
காதல் மணம் வீசுகின்றேன்-ஏற்பாயா?

ஒற்றைக் குயிலாய்க் கரைந்து என் காதலைச்
சொல்லுகின்றேன் -சோடிக்குயிலாய்
காதல் ராகம் இசைப்பாயா?

அன்பே காதல் இத்துனை பரவசமா?
என் நினைவுகளிலோ உன் கனவு
என் சுவாசமாய் உன் உறவு

என்ன செய்தது இந்தக்காதல்
என் நெஞ்சை நானே பறிகொடுக்க
"விழிபறி கொள்ளைக்காரியாய்"
அவளோ என் நெஞ்சை கொள்ளையடிக்க
என்னையிழந்து தவிக்கின்றேன் களிக்கின்றேன்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-20-04-2023

காதல் பக்தன்

செப்பியது, செந்தமிழே?, சிந்தியது வானமுதா?
இப்புவியில் உலாவரும் இவள் ஊர்வசியோ?
கம்பன் மைதிலியா? காளிதாஸன் சகுந்தலையோ?
கண்ட நாள் முதல் நெஞ்சிலே காதல் சுரம்
வேண்டுதலாய்த் தேவதையிடம் காதல் வரம்

கண்வழி நுழைந்த நெஞ்சினில் விளைந்த நித்திலமே
உன்னால் பித்தனானேன்
பூமிகா உனை சுற்றும் செய்மதியானேன்
சகியே எனைப் பாரடி காதல் மொழி கூறடி
எனச் சல்லாபிக்கும் காதல் பக்தனானேன்

அன்பே நீயின்றி என் நெஞ்சுக்கு நிம்மதி இல்லை-
தேன்மலரின்றி பூந்தேனிக்கு உணவில்லை
கன்னிமயிலே உன்னைக் காணாமல்
கலாபமயிலுக்கு ஆடல் இல்லை

புள்ளிக்குயிலே உன் கானம் கேளாமல்
உன் கோகிலத்திற்கு பாடல் இல்லை
வருவாயோ என் வானத்து முழு நிலவே
என்றும் காதலர் தினமென்று கூடி மகிழ்வாயோ?

கண்வழி நுழைந்து நெஞ்சினில் விழுந்த காதலே
உன்னால்- இருண்ட நெஞ்சிலும் காதல் தீபமடி
வரண்ட நிலத்திலும் காதல் மழையடி

சித்தம் தெளிந்து சிவனாகிச் சக்தி நீ ஆட்கொள்ள
உமையொருபாகனாய் உருமாறி-மெய்தழுவி
சுதி சேர்த்து மோகனராகமிசைக்கும் காமன் கவியானேன்.

முத்தமழை பொழிந்து பூமேனி செழிக்க மெய்சிலிர்த்தேன்
செவ்வாயில் செந்தேனருந்தி காதல் விடாய் தணித்தேன்-
இரவே விடியாதே என் இன்பத்தைப் பறிக்காதே
கவிபாடும் காதல் பக்தனானேன்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-20-04-2023

காதல் பாந்கடல்

நெஞ்சம் எழுதிய பொற்சித்திரமோ
நினைவில் பதிந்த நித்திலமோ?-என்
காதல் வானின் வெண்ணிலவோ-நாளும்
எனக்காய் கவிபாடும் பூங்குயிலோ-இவள்

வேல்விழியாள் கடைக் கண்வீச்சில்
கலைமானாய் விழுந்திட்ட மனம்
வெண்நிலவால் மலரும் அல்லியாய் -அவள்
கண்படும் போதெல்லாம் பூரிக்கும் தினம்

வண்ண நிலவாய்க் கண்ணுக்குள் மலர்ந்து, வாசமலராய்
சுவாசத்தை நிறைத்து பூந்தேனாய் நெஞ்சுக்குள்
இனித்தவள், நஞ்சாய் மாறியதுமேனோ-நெஞ்சில்
கொடும் நரகத்தீயை மூட்டியதுமேனோ?

காதலும் பொய்யோ?-கனிமொழியாள்
பேசிய கவிதையும் பொய்யோ?
அழகு மங்கையரின் இதயமும் கல்லோ?
காதல் போனபின் சாதலும் மெய்யோ?

மறக்கவும் முடியாமல், உறங்கவும் முடியாமல்
அவள் நினைவால் மனம் தவிக்க-அமுதாய் இனித்து,
ஆலகாலமாய் என்னைக் கொன்றிட
காதலே, என் நெஞ்சில் ஏன் மலர்ந்தாய்?

பூவாய் சூடிமகிழ்ந்தேன், நெஞ்சம் புண்ணாகிட
முள்ளானாய் அமுதாய் அள்ளிச் சுவைத்தேன்
ஆவி நொந்திட நஞ்சானாய் -ஏனடி
என் காதல் பைங்கிளி?

அமுதை பொழியும் நிலவை அமாவாசை
இரவில் சிறை வைத்தார் குமுதம் மலர்ந்த குளத்தில்
கொடிய நஞ்சை கலந்திட்டார்

பூபாளம் பாடிய சோடிக் குயில்களைப் பிரித்திட
வேதாளத்தின் ஆலோசனைகள்-காதல்
தேவாரத்திற்கு களிநடனம் புரிந்த மயில்களின்
கால்களை முறித்திட வேடனின் கோடாரிகள்

அமிர்தம் வந்தால் காதல் தேவனாய் மகிழவும்
ஆலகாலம் வந்தால் தேவதாஸாய் புலம்பவும்,
மஜ்னுவாய் அலையவும்
கன்னியர் காதலும் பாற்கடலோ?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-20-04-2023

காதல் தேன் துளிகள்

என் விழிகள் தேன்சிட்டாய் மொய்த்துக் கிடந்திட
காதல் கள்வடியும் பூக்களானதடி உன் விழிகள்

உன் விழிகள் வில்லானபோது
காமன் கணைகளால் புண்ணாணதடி என் இதயம்

என் நெஞ்சுக்குள்-காதல் தீ மூட்டும்
உன் நெற்றிப்பொட்டு
நுதலில் பூத்த வண்ணமலரோ

என்னை விழுங்கியவை-காதல் சுனையில்
நீராடும் கயல்களோ?

இமைகளா இவை-காதல் விழிகளுக்கு
சாமரம் வீசும் மயிற்பீலிகள்

கல்லான என் இதயத்தில் காதலைப் பொறித்தது
உன் வேல் விழிகளடி
கனவிலும் நினைவிலும் எனைவருத்துவது
விற்புருவம் விடும் காமன் கணைகளடி

உன் பேரழகோ என்னைக் கட்டிப்போடும்
மாய மந்திரம்

உன் செவ்விதழ்களில் தேனருந்தும்
பூங்குருவி நான்தானோ?

உன்னை வரைந்திட வண்ணங்கள் தேடினேன்
வானவில்லும், வண்ணப்பூக்களும் போதவில்லை

உன் செவ்வாய்மொழி கேட்டபின்-தேனும் கசந்தது
தெம்மாங்கும் இரைச்சலானது

காதல் கொள்ளைக்காரி-உன்னை கண்டபின்
என் இதயத்தை என்னிடம் காணவில்லை

என்றுமே வராத காதல்தேவதையே
உன்னைக் கண்டபின் எனக்கு வந்ததென்ன
வரமாய்-நீயும் உன்னையே ஈந்ததென்ன?.

முன்னிரவில் பால் நிலவொளியில்
நீ அமர்ந்திருந்த தோற்றம் -இன்றும்
என் நெஞ்சில் அழியாத கோலமடி

என்னை முதலில் கண்டபோது
நீயோ நாணிச்சிவக்க-என் உள்ளமோ
பாடிக்களிக்க கண்டுகொண்டேன்
நமக்கு காதல் வந்ததென்று

மழை மேகமாய் காதல் மழை பொழிந்து
கரைகின்றேன், காதல் ஒளி வீசி
பால் நிலவாய் காய்கின்றேன்
காதலே மனம் இரங்காயோ?

உன் பார்வையின் தழுவலால்
என் இதயத்தில் காதல் மழையடி

பிரபஞ்சத்திற்கு இறைவனே ஆதாரம்
என் காதலுக்கு-தேவதையே நீதான் ஆதாரம்.

உன் காதல் என்னைத் தொட்டபோது
நான் கவிஞனானேன்-நீயோ கவிதையானாய்

என் இரும்பு இதயத்தை ஈர்த்திட
உன் விழிப்புலத்துள் எப்படி வந்தது
இந்த காதல் காந்தப்புலம்

இருவரியில் உன்னை எழுதிப்பார்த்தேன்-காதலே
காமத்துப்பாலாய் இனித்தாய்
ஒரு வரியில் உன்னை எழுதிப்பார்த்தேன்
நான் நீயானேன்-அர்தநாரீஸ்வரனானேன்.

கால் கொலுசு கட்டியம் கூற, கைவளையல்கள் கதைபேச
பூவாசம் சுவாசத்தை நிறைக்க, புன்னகைப் பூமாலையிட்டு
காதல் சுயம்வரத்தில் நீ கொள்ளையிட்ட
காதலன் நான்தானடி.

காதல் என்பது உதயம் கண்டு மலரும் பூவானால் அன்பே
உன்னைக் கண்டு என்னிதயம் ஒரு பூவாய் மலர்ந்ததடி

காதலைச் சொல்லிட வார்த்தைகள் இல்லையடி
வார்த்தை தாண்டிய வடிவமாய் விழிகள்
சொல்லும் என் காதலோ கவிதை

வாசுகியே-என்னைப் பருகிப்பார்-காமத்துப்பால்
உனக்குப் புரியும் நான்தான் உன் வள்ளுவன் என
உனக்குத் தெரியவரும்.

என் விழிபார்த்து, இதயம் எழுதிய
முதல் காதல் கவிதை அழகே -நீதான்

பாலையாய் கிடந்த என்னிதயம்
உன்னைக் கண்டபின் பூந்தோப்பானதடி
உன் காதல் நினைவுகளால் என் நெஞ்சும்
காதல் நூலகமானதடி

உலக அழகிகள் மத்தியில்-நீதான்
என் காதல் உலகம்.

காதலைச் சொல்ல மொழிகள் இல்லா ஊமை நான்
கண்கள் பேசும் மொழிக்கோ வார்த்தைகள் இல்ல,
ஒரு பார்வைபோதும் காதல் சொல்ல
ஆனால் பிறவிக்குருடன் நான்
"பிரெய்லி முறையில்" காதல் சொன்னேன்
கயல்விழி உனக்குப் புரியவில்லை,
"மோஸ்கோட்" முறையில காதல் சொன்னேன்
என் காதல் மலர்ந்திட-உன் இதயக் கதவைத் திறந்தாய்

உன் ஒரு பார்வையால் காதல் வரம்பெற்ற
மானுடன் நான்தான்-என்காதல் தேவதை நீதான்

உன்னைத் தேடி புகலிடம் தேடிடும் அகதிபோல்
அலையுதடி என்னிதயம்.

என் காதல் வானில் என்றும்
நீதான் என் பௌர்ணமி

காதல் ஒரு கண்ணாடிபோலும்
உன் விழிகளில் நானும் என் விழிகளில் நீயும்
தெரியும் இந்த அதிசயம்-காதல் இரகசிமோ?

மழை மேகமாய்த் தொலைவில் நீயிருந்தாலும்
உன் காதல் மழையில் நித்தம் நனையும்
உன் காதலன் நானடி

வான் நிலவாய் உயர இருந்தாலும்-பௌர்ணமியே
உன் பால் ஒளியில் என் காதல் பயணம்

முதல் முதலில் உன்னை கண்டபோது
என்னிதயம் துடித்தது -அன்றுதான் உணர்ந்தேன்
எனக்கும் இதயம் உண்டென்று
அதுவும் உனக்கே சொந்தமென்று

உன் காதல் சிறையின் ஆயுள்கைதி நான்தான்
என் இதயக் கோயிலின் காதல் தேவதையும் நீதான்

காதல் உலகில் விழிகள்தான் மொழிகள் பேசும்
மௌனம்தான் இசைமீட்கும்

விழிகளால் என் இதயத்தை
கொத்தி திறந்து உள்ளே வந்த
காதல் மரங்கொத்தி நீதான்

இரவிலும் என்னை வருத்தும்
கனவுத் தேவதையும்-நீதான்.

கொஞசொலிக்க-கொள்ளையழகோ ,நெஞ்சைக்
கொள்ளையடிக்க, பூ மேனி வாசம் சுவாசத்தை மயக்க
என்னை நீ கடந்போகும் நேரமெல்லாம்-காதலே
என் நெஞ்சுக்குள் ஆயிரம் பூமழை

உனக்குச் சொல்லத் தவறியதை கவிதையாக்கினேன்
உன்னோடு வாழமுடியாத வாழ்வை
விரதமாயக் காக்கின்றேன்-காதல் தவசி நான்.

இருளில் ஒளிரும் நட்சத்திரங்கள்போல்
என் இதய வானில் உன் நினைவுகள்.

என் இதய வானில்-ஒரு நிலவுதான்
காதலே-அதுவும் நீதான்.

காய்ந்த புல்லாய் கிடந்தேன்-காதல்மழையே
நீ வந்தபோது காதலால் உயிர் பெற்று எழுந்தேன்.

பூமிகா உன்னைச் சுற்றும்- தேன் நிலவு
என்றும் நான்தானடி

மண்ணுக்குள் கிடக்கும் வைரங்கள்போல்-என்
காதல் நெஞ்சுக்குள் உன் நினைவுகள்.

தேவதைபோல் கண்ணுக்கு எட்டாத தொலைவில் நீயிருந்தாலும்
என் இதயக்கோயிலின் காதல் தேவதை நீதான்.

நீ-நீயாக இருப்பதாலும்-நான் நானாக இருப்பதாலும்
நம் காதல் உயிர் வாழ்கின்றது

நீரைத்தேடும் வேர்களைப்போல்
உன்னைத் தேடும் என் இதயம்.

நீ -எனக்கில்லை என்றாலும்
என்றும் என் நினைவுகளில் நீதான்
என் நெஞ்சிலும் நீதான்.

அன்பே என்னிடமிருப்பது உனக்காய் துடிக்கும்
காதல் இதயம் ஒன்றுதான்-அதுவும்-நீ தந்தது.

என் காதலைச் சொல்ல கவிதைகளைத் தூதாய்
அனுப்புகின்றேன் என் கவிதை ஒன்றையாவது நீ படித்தால்
என் காதல் உனக்குத் தெரியும்.
இருண்டவானில் -சிறு மின்மினிபோல்
என் நினைவு உனக்கு வந்தால் போதும்
என் காதல் வெல்லும்.

உன் விழியீர்ப்பு விசையில் விழுந்துவிட்ட என் இதயம்
உன் காலடியில் துடிப்பது- காதலே
உனக்கு கேட்கிறதா?

ஏனடி எனக்கு மட்டும் காதல் தேன் சொட்டும்
உன் புன்னகைப் பூக்களை பரிசளித்தாய்?
என்னை கவிஞனாக்கிவிட்டு-என் காதலே
ஏன் காணாமற்போனாய்?
கவிதை தூது விட்டு கரைந்து தேடுகிறான்
உன் காதலன்?

காதலே இன்றும் நான் கவிஞனாயிருப்பது
உன்னிடம் சொல்ல மறந்த காதலை
கவிதையில் சொல்வதற்கே
இன்று என் காதலை கவிதையில்
வடித்து அனுப்புகின்றேன்
காலம் கடந்தாலும்-என் காதல்
அழியாது என்பதை நீயறிந்திட

விழியிரண்டும்-கயல்களாகி
காதல் அருமருந்தாய் என்னை விழுங்கிட
மெய்மறந்தேன்-மொழியிழந்தேன்
காதல் தேன்மழையில் நனைந்து.

மண்ணுக்குள் நான் மறைந்துபோனாலும்
என் நெஞ்சுக்குள் ஒளிரும் உன் காதல் சுடர் அணையாது
என் இதயமும் காதல் எச்சமாய்-கல்லறையில்
உனக்காய் காத்திருக்கும்.

உன்னை-நான் ஒருபோதும் நினைப்பதில்லை
ஏனென்றால் உன்னை-நான் ஒருபோதும்
மறக்கவில்லை-என்றும் என் நினைவே நீதான்.

காதல் சுரம் என்னைப்பற்றிட
உன் விழிகள் பொழிந்தது
காதல் மழையா? காமத்துப்பாலா?

இன்றும் வண்ணம் கலையாத அஜந்தா ஓவியம்போல்
என் நெஞ்சில் உன் அழகு பிம்பம்

மூப்பும்-பிணியும் கோலமிட்டாலும்
சாவு என்னை அழைத்தாலும் என் நெஞ்சில்
நீ இட்ட காதல்கோலம் அழியாத கோலமே

காதலர்கள் சாகலாம்-காதலுக்கு
மூப்பேது-பிணியேது-சாவேது

உன்னை வர்ணிக்க வார்த்தைகளின்றித் தவிக்கின்றேன்
காளிதாஸனையும் கண்ணதாஸனையும்
அருள்புரிய அன்பே அழைக்கின்றேன்.

கள்வடியும் பூவோ, காதல் தேன்வடியும் பூவையோ
என்னை மயக்கியது?-பூந்தேன் தும்பியாய் பூவிழியாள்
பார்வையில் நான் மயங்கிட கண்களால் காதல்
மாலை சூடி ஆட்கொண்டாள் என் ஆண்டாள்.

என் காதல் நோய் தீர்க்கும் தேவ மருந்து
என் காதல் தேவதை நீதானடி

காதலே உன் காதலோடும் கலையாத கனவுகளோடும்
ஈரவிழிகளோடு நான் மட்டும் தனியாக,
நீயோ இன்னொருவன் துணைவியாக

என்னை ஈர்த்திடும் விழிப்புலத்தின் காந்த அலைகளா
இல்லை-என்னை மூழ்கடிக்கும் காதல் அலைகளா
இவள் விழிகளின் காதல் மொழிகள்

வட்ட நிலவுக்கு யார் சூட்டினார் கண்களாய் குவளைப்பூக்களை?
வான்நிலவுக்கு யார் சூட்டினார் இதழ்களாய் செவ்வாயை?-
திருஷ்டிகழித்திட வெண்ணிலவுக்கு யாரிட்டது குங்குமப் பொட்டு?

உன் கொஞ்சொலியில் என் செவிமயங்கும்
மேனி வாசத்தில் சுவாசம் கிறங்கும்
உன் ஸ்பரிசத்தால் என் மெய்சிலிர்க்கும்
உன் அழகால் என் விழிகள் புலம்பும்

உன் காதல் புலத்தால் என் இதயமும் துடிக்கும்
காதல்தீர்த்தமாய் உன் இதழமுதம் பருக என் நெஞ்சு தவிக்கும்
என் ஐம்புலன்களையும்-ஆறாம் அறிவையும்
காதல் பிணி வருத்தும்

அலையும் கடலாய் நான் அடையாத கரையாய் நீ

உன்னைப் பிரியாத நிழலாய் தொடரும் என் காதல்
காதலே, உன் காலடியில்
கடைக்கண் பாரடி

அன்பே உன்னை மறப்பதே பாவம்
உன் நினைவே புண்ணியம்.

கண்களால் நீ மூட்டிய காதல் தீயை
கண்ணிரால் ஏனடி அணைக்கச்சொல்கிறாய்?

என் காதலில் முள்ளும் நீ, மலரும் நீ.
.
வட்ட முகத்தில் வண்ணக் கயல்கள் நீந்திட
விற்புருவம் மலர்கணை எய்திட
நெற்றித் திலகமோ நித்திலமாய் ஒளிர்ந்திட
செவ்வாய் இதழ்கள் முத்தம் தர அழைக்கும்
முத்துப் புன்னகை பூத்தாட
கன்னக்கதுப்பினில் நாணச்சிவப்பும்
செம்பவள காது மடல்களில்
தங்கச் சிமிக்கியும் காதல் சொல்லிட
கார் கூந்தல் சூடிய மல்லிகை மனதை மயக்கும

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-04-2023

காதல் திருடன்

ஒற்றை குயிலாயக் கரைகின்றேன்-கோகிலமே
நீ குரல் தரவில்லை
வற்றும் நதியாயக் காய்கின்றேன்-வானமே
நீ காதல் மழை பொழியவில்லை

உள்ளமோ துருவப் பனியாய் உருகிக் கரைய
எண்ணமோ செய்மதிபோல் உன்னைச் சுற்றியலைய
இதயமோ, ஓட்டை விழுந்த ஓசோனாய் வருந்த
கண்ணீர்ப்பூச் சொரியக் காய்கின்றேன்

கன்னங்களிலோ வேதனையைச் சொல்லிடும் தாடி
எண்ணத்திலோ அலைமோதும் சோகச் சுனாமி
காயத்திலோ கந்தல் ஆடை-இதயத்திலோ
பொங்கிப்பாயும் சோக ஓடை

இரக்கமில்லாதவள் என்று ஊரார் ஏசிட
இதயமில்லாதவள் என்று நண்பர் பழித்திட
யாரும் அறியாத நம் காதல் இரகசியம்
எனக்குள் இருக்கும் உன்னிதயம்
உனக்குள் துடிக்கும் என்னிதயம்

காதலைப் பரிசளித்தேன், கண்ணீர்ப் பூக்களை எனக்களித்தாய்
பூபாளம் நானிசைத்தேன்- முகாரியைப் பாடவைத்தாய்
“பார்வதி சிவனாய்” உன்னை தொழுதேன்
ஏனடி “இன்னோர் தேவதாஸாய்” புலம்ப விட்டாய்

மதுவும் காதலை மறந்திட மருந்தல்ல-நஞ்சும்
நெஞ்சில் நிறைந்தவளை துறக்க வழியல்ல,
என் காதலை வாழவைக்க வழியின்றி
காதலே நீ வாழ, வழிவிட்டுப் போகிறேன்

உன் இதயத்தை மட்டும் திருடி
என் உயிரென நான் எடுத்துச்செல்லும்
உன்தன் காதல் திருடன் நான்தான்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-04-2023

காதல் வசந்தம்

விழிகளால் நெஞ்சுக்குள் காதலை விதைத்து
கவிதையால் தூதுவிடுத்து
காதல் போருக்கு அழைப்பு

ஒரு புன்னகையால்
காதல் நெஞ்சில் என் புதுக்குடியிருப்பு
மெல்லிடையால் மேகலையால்
காதல் மனதை சுற்றி வளைப்பு

கால் கொலுசின் இன்னிசையாய் கொட்டிடும்
அவள் காதல் முரசு, பூங்கரங்களால்
என்னை கட்டியணைத்திட, வளையல்களில்
முரசொலிப்பு, காதலின் படையெடுப்பு

நாணச்சிவப்பினைக் காட்டி
சரணாகதியான கன்னி மனசு
ஆனந்த கும்மி கொட்டிடும் இளவயசு

இது காதல் வசந்தத்தின் இன்னிசை
காமன் கோயிலின் மணியோசை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-04-2023

காதல் வைரஸ்

உன்னைக் காணும்வரை நிலா அழகென்றேன்,
நீலவானம் அழகென்றேன், மலர் அழகென்றேன்-
பூங்குயில் கானம் அழகென்றேன்-பேரழகே
உன்னைக் கண்டபின் அழகின் அர்த்தம் புரிந்ததடி
காதலாகி பூம்புனலாய் நெஞ்சம் பொங்குதடி

காமன் கண்நோக்க, காதல் பூப்பூக்க,
பூவாய் மலர்ந்து, பூந்தென்றலாய் என்னைத் தழுவி,
தித்திக்கும் தேனாய் இனித்தவள்,
மண்ணில் கிடந்தவன் விண்ணில் பறந்திட
காதல் இறக்கைகள் தந்த தேவதையாள்

கவிபாட வரம் தந்த காதல் கலைமகள்,
கன்னி மனம் ஆள வரம் தந்த மலைமகள்
காதற்செல்வம் தந்த திருமகள்
கண் மறைந்தாள்-காதலன் என்னை மறந்து.

வான் மேகங்களும் தேடிச் சோர்ந்திட
என் தேன்நிலவுக்கும் அமாவாசை என்றானது
கானக்குயிலாய் நானும் கரைந்தழுதிட
என் சோடிக்குயிலும் ஊமையானது

பொன் மலர்களே, பூமகளிடம் சொல்லுங்கள்
அவள் காதல் தேன் சுவையிழப்பதை
புள்ளினங்களே- கூறுங்கள்-காதல் மழையின்றி
அவள் காதல் ரோஜா கருகுவதை

சோகச் சுனாமியில் மூழ்கிடும் காதல் நெஞ்சம்
விடியலில் மங்கிடும் வெண்ணிலவாய்
சோபை இழந்திட்ட எந்தன் உள்ளம்

காளையரை வாழவைக்கவும், சாகடிக்கவும்
கன்னியர் காதலும் காதல் சஞ்சீவினியும்
காதல் வைரஸிமான மாயம்
அமுதும், ஆலகாலமுமான உபாயம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-04-2023

காதல் யாசகம்

என் இதயவாசலில், காதலை யாசித்த தேவதையே,
இருப்பதை கொடுப்தில் மகிழ்பவன்-ஏனோ
என் இதயத்தை கொடுத்திட அஞ்சினேன்
காதல் யாசகமல்ல-இதயங்களின் சங்கமம்

என் நெஞ்சில் தோன்றியது -ஈரவிழிக் காவியமே
கழிவிரக்கமேயன்றி காதல் அல்ல
காலங்கள் மாறிட-வசந்தம் பூத்திட
காதல் பூத்த இதயத்தை காணிக்கையாக்கிட
ஓடோடி வந்தேன், இன்றோ நீ இல்லை

காதல்பூக்களோடு நான் ஓடோடி வந்திட
காகிதப் பூக்களோடு-மணமகளாய்
கடல் தாண்டிய உன் காதல் யாத்திரை,
என் ஆனந்தத்திற்கு விதி குத்திய சாவு முத்திரை

சேற்றிலே என் காதல் பூக்கள் சிதறிட
புழுதியிலோ என் வண்ணப் பூமாலை விழுந்திட
காதல் நெஞ்சிலோ-கொதிக்கும் பாலை
உன் காதலோ எரிக்கும் தீச்சுவாலை

காதலே!, உன்னை மறக்க வழியின்றி-கண்ணீர்ப்
பூச்சூடித் தவிக்கிறேன் -மதுவில் மூழ்கி மறக்கத் துடிக்கிறேன்
மதுவோ விடியலில் கலையும் போதை-காதலோ
என்னை மெல்லக் கொல்லும் நஞ்சின் வாதை

வேல் விழியாள்-நெஞ்சில் காதலை விதைத்து
கவிதைத் தூது விட்டவளே, இறக்கை
முளைத்திடப் பறந்து வந்தேன்
பாதியில்-சிறகு முறிந்து தரையில் விழுந்து
எரி நரகில் வேகின்றேன்-ஏனடி?

கடலைத் தேடும் நதியின் பயணம்
சாக்கடலில் முடிந்ததடி-சஞ்சீவினியாய் கண்ட
காதலே என்னைக் கொல்லும் நஞ்சானதடி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-04-2023

கன்னியின் காதலன்

என் சுவாசம் அறியாத இன் சுகந்தமாய் இவன்
என் சுவாசத்தில் வீசும் காதல் புயலுமாய் இவன்,
காணும் பேதெல்லாம் துள்ளிக் குதிக்கும் இதயம்
நாணிச் சிவக்கும் நறுமண மேனியிலோ காதல் பரவசம்





என் இதழ்கள் விரும்பிச் சுவைக்கும் -இன் சுவையாய்
அவன் புன்னகை- இதயத்திலோ என் உயிரைத் தழுவும்
காதல் மின்சாரமாய் அவன் பார்வைகள்
இதுதான் காதலா? என்னைக் கேளாமலே
என் இதயத்தை திருடிய காதல் கள்வன் இவன் தானா?

என் நெஞ்சுக்குள் அவன் மூட்டிய மோக நெருப்பு இதயத்தை தீய்க,
அவன் கண்களைப் பார்த்த விழிகள் இமைக்க மறுக்க,
இரவிலும் கனவிலும்-இவன் எண்ணம் நெஞ்சை நிறைக்க,
இது என்ன மாயம்-நாளும்-அவனை காணத் துடிக்கும் இதயம்,
ஏங்கித் தவித்து மலரத் துடிக்கும் பூ விழிகள் தேடும் உதயம்



அவனைக் காணும்போதெல்லாம்
என் கண்களிலோ துளிர்க்கும் காதலின் இனிப்பு
என் இதயத்தை வாட்டும் இன்பக் காதல் நெருப்பு
முகத்திரை மூடிய விழிகளையும் தாண்டி-என்னை
வீழத்திய மோகத்திரை-பாதை மறந்த
கன்னி வாழ்வோ நாளும் காதல் யாத்திரை

இவனின்றி எனக்கு வாழ்வில்லை என்று நெஞ்சு தவிக்க-
சொல்லாமல் என் நெஞ்சை திருடிய காதல் கள்வனை
உயிரும் மெய்யும் கண்டு நாணிச் சிவக்க,
என் உள்ளத்திலோ சொல்ல முடியாத பரவசம்-இதயமோ
இவன் இதழ் சுவைக்க தவித்தே புரியும் இன்பத்தவம்.

என் சின்ன இதயத்தை தாக்கும்
காதல் வைரஸ் இவன் கண்கள்தானா?
என் இதயத்துடிப்பை கூட்டும்
காதல் ஹோர்மோன் இவன் புன்னகைதானா?
காணும்போதெல்லாம் நாணத்தால் நான் சிவக்க
கண்களால் அவன் என்னை அணைக்க
என்னையிழந்து இதயம் அவனை தழுவத் துடிக்க
காதல் நோயுற்றே கலங்கும் கன்னி நான்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-04-2023

காதலர் தினம்

கவிதைப் பூக்கள் இன்றி-காதல் மலரே
என் மனமும் வரண்ட பாலையானது
உன் காதல் மழையின்றித் தேன் நிலவே
என் இதயமும் காயும் நதியானது

இதயங்கள் பேசிட-இனியவளே
விழிகளிருக்க வார்த்தைகள் எதற்கு?
காதலின் தேவராகத்திற்கு -மௌனம்
இருக்கையில் இன்னிசை எதற்கு?

சங்கினுள் ஒலிக்கும் சங்கீதம்போல்
என் நெஞ்சினுள் ஒலிப்பது உன் பெயரே
உதிரம் கலந்த செவ்வண்ணமாய்
உயிரோடு கலந்ததும் உன் காதலே

உன் முத்தப் பூச்சூடி என் உயிரும் மெய்யும் தித்திப்பாகிட
உன் மோகனப் புன்னகையில் மயங்கி
என் மனமும் கலாபமயிலாய் ஆடிக்களித்திட
ஆதாம் ஏவாளாய் ஏதேன் தோட்டத்தில் நாம் உலாவிட
நாளும் நமக்குக் காதலர் தினமே.

காதல் மலரே, உன்னைக் காண
கவிதை பூக்கும்-என் மனமும்,
காதலின் அதிசய வரமே.

கண்களால் கண்கள் உரசிட-நெஞ்சில் காதல் தீயை மூட்டியவள்,
இதழ்களால் இதழ் “கள்” அருந்திட காதல் போதையை ஏற்றியவள்,
தென்றலாய் தழுவி உயிரில் காதல் சுரத்தை பரப்பிய காதல் வைரஸ்
என் பிரியமானவள்-இவள்தானா? கனவிலும் எனை பிரியாத
இவள் பெயர் “ப்ரியா”தானா?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-04-2023

காதலே போ போ

என்னவள் சொன்ன ஒரு வார்த்தையால்
என் விழிகளிலோ-“நயகரா”, உயிர்-மூச்சினிலோ “எட்னா”
பூ நெஞ்சினிலோ காதலை சிதைத்திடும்
கொடும்புயல் -கத்தறினா

கொதிக்கும் ஈயமோ காதைத் தீய்க்க-
கருக்கான ஈட்டியோ நெஞ்சில் பாயத்,
துடிக்கும் இதயமோ மண்ணில் சாய
என்னை மறந்துவிடுங்கள் என்று-மலர்க்கூந்தல்
காதலியாள் சொன்னது நெஞ்சுக்கு நஞ்சானது

மறக்க முடிவது காதல் அல்ல-உன்னால்
மறக்க முடிந்தால்-உன் நெஞ்சில் இருப்பதும்
காதல் அல்ல-உன்னுள்
உனக்காய் உருகும் என் உயிரைப் பார்
துடிக்கும் என் இதயத்தை கேள்
என் காதல் மெய்யென்று உனக்கு புரியும்

ஒரு பொழுதிற்குள் பூத்து உதிர்ந்திடக்-காதல்
ஒன்றும் மலரல்ல, மாதத்தில் வளர்ந்து தேய
காதல் ஒன்றும் நிலவல்ல.

அன்பே உன் மீது நான் கொண்ட காதல்
மெய்யென்று சொல்ல-
பொய்யாய்ப் போகட்டும் உன் காதல்
எங்கிருந்தாலும் நீ வாழ
புண்ணாய் போகட்டும் என் நெஞ்சம்

நலம் வாழ எந்நாளும் உனை வாழ்த்தும் என் நெஞ்சும்
என் காதல் மெய் என்று சொல்லி-என்றும்
உனக்காய்த் துடித்தே மெல்ல இறக்கும்
உன் விழிகளில் அன்று நீர்ப்பூக்கள் மலரும்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-04-2023

காதல்-காதல் -காதல்

காதல், காதல், காதல் காதல் போயின் சாதல்- சாதல்-சாதல்
ஊன் பொசுங்கி, உதிரம் சுண்டிட-என் வான் சுருங்கி, கண்ணீரும் வற்றிட
காதலும் பொய்யானதே நாளும் பொழுதும் என்னை
மெல்லக் கொல்லும் கொடிய நஞ்சானதே
***
எத்திக்கும் நீயாகி என்னிதயத்தே ஊறும் காதல் தேனாகி
தித்திக்கும் முத்தமிழாய் இனித்தவளே-ஏனடி
என்னை இன்னோர் தேவதாஸாய் உருக்குலைத்தாய்
***
எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி
ஏழை நெஞ்சம் புண்ணாணதே,
பேரழகு கன்னித் தமிழ் பெண்ணைக் கண்டதினால்-
நெஞ்சில் காதல் கொண்டதினால்
***
எண்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும்-முத்தமிழே
என் உயிர் நீயடி, உன் மெய் நானடி.
நீயின்றி நானில்லை-உனையன்றி-எனக்கு எந்த
காதல் உறவுமில்லை.
***
அல்லி மலரே-அல்லும் பகலும்
உன்னை எண்ணித் துடித்த வான்மதி நான்-
காதலால் கல்லும் உருகிட செய்மதிபோல்
உன்னைச் சுற்றிச் சுற்றி வலம் வந்தேன்
உன் உள்ளம்தான் உருகவில்லை- ஏனடி
என் துருவப்பனியே?

பெற்றேன் காதலை, மொழியறியா
பேருணர்வினை, நெஞ்சினுள் கற்றேன்.
கரைந்துருகும் பெருநிலை
தந்தவள், காலமெல்லாம் வாழ்கவே.

****

சித்தம் தெளிந்து சிவனானேன்
காதல் பித்தன் நான்-சக்தி எனை ஆட்கொள்ளடி
உமையொருபாகனாய் என்னை உருமாற்றடி.

தேடினேன் திக்கனைத்தும்-காணாமல் சிந்தை நொந்து வாடினேன்
என்புருகி நெஞ்சம் இளகிட, கரைந்துருகிப் பாடினேன்
ஊனுக்குள் நீ நின்றுலவினதை காணாமல்
என் இளநெஞ்சு குணமாகிட-கண்மணி காதல் சொல்லடி
-

ஆழித்துரும்பானேன்-அங்குமிங்கும் உன்னைத் தேடி
-ஊழிக்காற்றில் அல்லாடும் நூலறுந்த பட்டமானேன்
காதலால் வாடி-என் தோழி
காதல் வரம் தருவாயோ?.

இனவாதம் இட்ட தீ –யாழ் நூலகத்திலே
இந்து-மதவாதம் இட்ட தீ பாபர் மசூதியிலே
மதப் பயங்கரவாதம் இட்ட தீ இரட்டை கோபுரத்திலே-
ஈசன் இட்ட தீ வான் முகட்டிலே-
கண்மணியே -நீ இட்ட காதல் தீ எரிக எரிக
என் நெஞ்சினிலே-

காதல் வேள்வியிலே ஆகுதியானதடி இதயம்
காதல் வரம் தருவாயோ
என் கன்னித் தேவதையே.?

கண்வழி நுழைந்து –நெஞ்சினில் விழுந்த
காதல் தீப்பொறியே-பற்றி எரிகின்றேன்
இரட்டைக் கோபுரமாய்-கண்ணே-என் காதல்
மழையே -காதல் தீ வளர்க்க வாராயோ?
***
கண்மணி உன்னைக் கண்டதினால்
நெஞ்சினுள் தொற்றியது காதல் வைரசு,
காதல் தந்ததனால் -நெஞ்சினுள்
கொட்டுது உவகை பெருமுரசு

சோழன் மகளே அமராவதி
கம்பன் மகன் அம்பிகாபதி பாடும் கவிதையிது
கொலைக் களம்தான் காதல் பரிசானாலும்
களப்பலிதான-காதலன் என்
நிலையானாலும் நிலைகுலையேன்
என் வானத்து நிலாவே-சோகத்தால் தேயாதே-
அமவாசை இருளில் மறையாதே

முத்தத்தில் முக்கனியினிக்கும்-
முத்துநகையாள் மொழியில் கவிதை பூக்கும்
பூந்தேகத்தில் வாசமுல்லை மணக்கும்-
தித்திக்கும் தேன்மொழியாள் இதயமோ
எனை கண்டு காதலாகி மலரும்

எத்திக்கும் தேடியலைந்தே கண்டேன்,
காதல் கொண்டேன் பைங்கிளியே
வாட்டிய காமத்தீயும் அணைந்ததடி
காதல் வேள்வியும் தொடங்குதடி.

***

திருமுகமோ வான்மதியைப் பழிக்கும்
கார்கூந்தலோ வாசமலர்களை உள்ளும்
நூலிடையோ பூங்கொடியை பழிக்கும்
செவ்வாய் கண்டு கோவை சிவக்கும்

மோகனம் குடியிருக்கும் காதல் மோகினியாள்
சித்தத்தில் சிவனாய் நானிருக்க
கண்பட்டால் புன்னகை பூக்கும்-பூ முகம்
கைபட்டால் நாணிச்சிவக்கும்-பொன்மேனி
கவிதை சொன்னால் இரசித்து பாடும் கானக்குயில்
காதல் சொன்னேன்- நாணி பூப்பூத்தே இதயம் தந்தாள்
இளநெஞ்சில் -இறக்கைகள் முளைத்திட
எழுந்து பறக்கின்றேன்-மானிடரே காதல் செய்வீர்.

***

மலரென்றேன் -இன்பத்தேன் நீ என்றாள்
நிலவென்றேன் -என் வானம் நீ என்றாள்
பண் என்றேன் - என் காதல் பா நீ என்றாள்
நினைவென்றேன் என் நெஞ்சுக்குள் நீதான் என்றாள்
உறவென்றேன்- என் உயிர் நீ என்றாள்
என் உயிர்காதலியாள் .

***

முத்தமிழ் என்றேன்-வானமுது நீ என்றாள்
முப்பால் என்றேன் தித்திக்கும் காமத்துப்பால் நீ என்றாள்
சீதா என்றேன்- என் சீதாராமன் நீ என்றாள்-இன்று
வாடுகின்றேன் துஷ்யந்தன்போல் என் சகுந்தலையை மறந்து,
வருந்துகின்றேன், விதிவசத்தால் மாதவியை
மோகித்த கோவலன்போல் மனம் நொந்து
தேவர்களே என் கண்ணீர் வேள்வியை
என் தேவியிடம் கூறுங்கள்-
என் காதல் கரைசேர கருணை புரியுங்கள்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-04-2023

காதல் கீர்த்தனம்

அன்பே, சுகம்தான என நலம் விசாரித்தாய்
எனக்காய்த் துடிக்கும் உன் இதயத்தைக் கேட்டுப்பார்?
துடிக்கும் இதயத்திற்கு நடிக்க தெரியாது
அது சொல்லும் காதலின்றி வாடும்
காதலன் என் உள்ளம்

நீயின்றி நெய்யின்றி அணையும்
சுடராய் வாழ்க்கை
மழை காணாச் சுனையாய் காயும் இதயம்

நிலவே
உன்னைக் காணத நாள் எல்லாம்
கணகளுக்கோ அமாவாசை
உன் பார்வை தழுவும்போதெல்லாம்-என்
இதயக் கோயிலிலோ காதல் மணியோசை

விடை தெரிந்தும்-காதலே
ஏனோ வினா தொடுத்தாய்?
மலர் என அறிந்தும்-முள்ளாய்க்
கணை விடுத்தாய் ஏனடி?

முத்தமிழே-உன் பெயரே என் காதல் பாசுரம்
முழுநிலவே நீயே, இறைவன் எனக்கீந்த
காதல் வரம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-04-2023

காதல் பாசுரம்

அள்ளி முடிந்திட்ட கார்கூந்தலில் வெள்ளி பூத்ததென
முல்லையும், மல்லிகையும் பூத்திருக்க,
புள்ளிமானாய்த் துள்ளி வந்தவள் பூ முகத்தில்
என்னைக் கண்டதும் நாணமாய்ச் செவ்வண்ணம்

திருமகளோ இல்லை-தேவதையோ
என் மனம் அதிசயிக்க-முத்துநகையோ,
முல்லைச்சரமோ, மோகினியே உன் புன்னகை
சப்தசுரமோ, தேவகானமோ தேவதையே உன் கீர்த்தனை

தித்திக்கும் தேனோ, அமுதோ- தேவகியே
உன் செவ்வாயிதழ் கனிரசம்- கவி மனதில்
காமன் அம்பு தைத்ததால் பொங்கிடும் நவரசம்

சித்தன்ன வாசல் மோகினியோ-சிந்தை குளிர்ந்திட
காதல் பக்தனுக்கு காட்சி அளிக்கும் தேவதை,
சூடிக்கொடுத்த ஆண்டாளோ –கண்ணனுக்காய்
விஷம் அருந்தி பிழைத்த மீராபாயோ
காதல் முக்திக்கு வழிகாட்டும் பக்தை

காதல் அபிநயத்தை காவிரி மாதவி காட்டிட
கண்களால் காதலை மிதிலையின் மைதிலி சொல்லிட
சூடிக் கொடுக்கும் கோதையாய்-பூமகளும்
குவளை விழிகளால் காதல் மாலை சூட்டினாள்

மனமோ காதல் சிந்துபாடிக் களித்திட-கண்டதும்
காதல் கொண்டதும் கவிதை பாடி மகிழ்ந்ததும்
வாழ்வின் வசந்தங்களாக-இன்றோ காணத்தவித்து
கண்டதுவும், பேசத் தவித்து பேசியதும்-
கனவாய் கலைந்து
பழங்கதையாயப் போனதுவே

அடிக்கரும்பாய் நீ இனிக்க- பாலையில்
நுனிக்கரும்பை தேடி நானோ அலைக்கழிய,
என் வாழ்வோ, பொன்மானைத் தேடிய
ஸ்ரீராமனின் துன்பக் கதையாய் போனதடி

கானகத்தே கைவிட்ட நளனென்றே-காதல் மேகமும்
கடல் கடந்து போயிட, கைத்தலம் பற்றிடக் கணவனும் கிடைத்திட,
நளனும், இராமனும் உற்ற துயர், ஒன்றாய் என்னைப் பற்றிட
வாடுகின்றேன்,காதலே உனைப் பிரிந்து வருந்துகின்றேன்.
எங்கிருந்தாலும் வாழ்க என்றே வாழ்த்துகின்றேன்

இமைக்கரையோரம் முட்டி நிற்கும் கண்ணீர் அலைகள்
இதயத்தில் சுனாமியாய் பொங்கிடும் சோக நிலைகள்
பார்வதிக்காய் பரிதவிக்கும் தேவதாஸாய்,
லைலாவிற்காய் அலையும் மஜ்னுவாய்
கவி நெஞ்சில் காதல் நிலைகள்

காதலும் மெல்லகொல்லும் விஷம்தானோ? கன்னியர் இதயமும்
அமுதும், ஆலகாலமும் வாழும் பாற்கடல்தானோ?
அமுதை உண்ட தேவனாய் கணவன் அவன்
ஆலகாலம் உண்டு வாடும் சிவனாய் இவன்

பார்வதி உன் தேவதாஸைப் பாரடி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-04-2023